**உள்ளடக்கம்**


| | | |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 68 |
| 2. | நோக்கு | 69 |
| 3. | செயற்பணி | 70 |
| 4. | தவிசாளர் உள்ளிட்ட பணிப்பாளர் சபை | 71 |
| 5. | பிரதான அலுவலர் சபை | 72 |
| 6. | நிறுவன ஒழுங்கமைப்பு | 73 |
| 7. | தவிசாளரின் மீளாய்வு | 74-75 |
| 8. | பணிப்பாளர் சபையின் அறிக்கை | 76-78 |
| 9. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை | 79-80 |
| 10. | அமுல்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் | 81-110 |
| 11. | நிதிக் கூற்றுக்கள் | 111-120 |
| | அ. நிதி நிலைமைக் கூற்று | |
| | ஆ. வருமான செலவினக் கணக்கு | |
| | இ. காசுப் பாய்ச்சல் கூற்று | |
| | ஈ. உரிமையாண்மை மாற்றம் பற்றிய கூற்று | |
| 12. | அரசாங்க கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 121-140 |

## அறிமுகம்

## நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையானது

2008ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க

நகரக் குடியிருப்பு அதிகார சபை

சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டது.

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையை தாபித்ததன் அடிப்படை நோக்கம் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி சம்பந்தமான தேசிய கொள்கையை தயார்செய்தல், நிலையான நகரக் குடியிருப்பு அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக குறைந்த வசதிகளைக் கொண்ட நகரக் குடியிருப்புகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துதல் மற்றும் அம்மக்களுக்கு ஆகக்குறைந்த நகர்ப்புற வசதிகளுக்கான அணுகுமுறைகளை ஏற்படுத்திக்கொடுத்து தற்போது காணப்படுகின்ற வீட்டு அலகுகளை மேம்படுத்துவது அல்லது மிகவும் நல்லதொரு வீடமைப்பு வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை தயார்செய்து அமுல்படுத்துவதாகும்.

# நோக்கு

"நிலையான நகரக் குடியிருப்புகளில் உயர் தரம்மிக்க வாழ்க்கை முறையை உறுதிசெய்தல்...."



# செயற்பணி

"நிலையான நகர அபிவிருத்தி திட்டத்திற்கு அமைவாக குறைந்த வசதிகளைக் கொண்ட நகரக்குடியிருப்புகள் மற்றும் நகர்ப்புற பிராந்திய மக்களின் வீடமைப்பு சிக்கலுக்கு தீர்வு வழங்குதல் மற்றும் அதற்குச் சமாந்தரமாக அவர்களை சமூக, பொருளாதார மற்றும் கலாசார ரீதியாக வலுவூட்டல்"

# 2015

## 2015.01.01 முதல் 2015.12.31ஆந் திகதி வரையான பணிப்பாளர் சபை

| தொ. இல. | பதவி | பெயர் | நியமனம் பெற்ற திகதி |
|---|---|---|---|
| 1 | தவிசாளர் | திரு. யு.ஜே. குலரத்ன | 2015.04.28 |
| 2 | பணிப்பாளர் நாயகம் (பணிப்பாளர் சபை செயலாளர்) | திரு. ஆர்.எஸ். கஹவல | 2015.10.19 |
| 3 | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. டி.ஏ.பி. அபேசேகர | 2015.03.10 |
| 4 | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. நிஹால் பெர்ணாந்து | 2015.10.09 |
| 5 | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. எல்.எஸ். பலங்சூரிய | 2015.03.31 |
| 6 | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. கே.ஏ.எஸ். வல்பொல | 2015.04.27 |
| 7 | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. டபிள்யு.எம். குணரத்ன | 2015.03.13 |
| 8 | பணிப்பாளர் சபை உறுப்பினர் | கலாநிதி மஹீம் மெண்டிஸ் | 2015.03.13 |
| 9 | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. ஈ.எல்.டபிள்யு. சமரசிங்க | 2015.03.13 |
| 10 | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. ஏ.கே.பி. விஜித் சந்திம | 2015.05.12 |
| 11 | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. டி.ஏ. காமினி | 2010.05.24 |
| 12 | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. ஏ. சந்தியாகோ | 2015.05.18 |

## 2015
### பிரதான அலுவலர் சபை

### 2015.01.01ஆந் திகதி முதல் 2015.12.31ஆந் திகதி வரை

| தொ. இல. | பதவி | பெயர் | நியமனம் பெற்ற திகதி |
|---|---|---|---|
| 1 | தவிசாளர் | திரு. யூ.ஜே. குலரத்ன | 2015.04.28 |
| 2 | பணிப்பாளர் நாயகம் | திரு. ஆர்.எஸ். கஹவல | 2015.10.19 |
| 3 | பணிப்பாளர் (சமூக திரட்டல்) | திரு. வை.ஆர். த சில்வா | 2011.11.01 |
| 4 | பணிப்பாளர் (நிதி) | திரு. என்.பி.பி. டயஸ் | 2011.02.01 |
| 5 | உள்ளக கணக்காய்வாளர் | திரு. எல்.ஆர்.ஏ. ‘ாந்த | 2011.02.01 |
| 6 | உதவிப் பணிப்பாளர் (சட்டம்) | திருமதி. டி.ஏ. தேவிகா திசாநாயக்க | 2011.11.01 |
| 7 | உதவிப் பணிப்பாளர் (ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்) | திருமதி கே.ஏ.டப்ளியூ.ரி.பி.டி. சில்வா | 2011.11.01 |
| 8 | உதவிப் பணிப்பாளர் (வழங்கல்) | திரு. ஆர்.டி. சுசந்த பெர்ணாந்து | 2014.05.26 |
| 9 | உதவிப் பணிப்பாளர் (நிதி) | திரு. ஏ.எம்.கே. பண்டார அதாவுத | 2012.06.11 |
| 10 | உதவிப் பணிப்பாளர் (கட்டிடக்கலை) | திருமதி எம்.எஸ்.வி. விபுலகுன | 2012.08.08 |
| 11 | உதவிப் பணிப்பாளர் (காணி) | திரு. டபிள்யு.பி.யு.கே. பெரேரா | 2014.11.10 |
| 12 | உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) | திரு. ஏ.பி.ஆர். ஞானப்பிரிய | 2014.11.17 |

# 2015 நிறுவன ஒழுங்கமைப்பு



## தவிசாளரின் மீளாய்வு

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையானது 2008 இன் 36 ஆம் இலக்க நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டுள்ளதுடன், ஆண்டின் இறுதியில் சுமார் 07 வருடக கால வரலாற்று உரிமையையும் கொண்டுள்ளது. இந்த அதிகார சபையைத் தாபித்த நோக்கமாக இருப்பது நகரக் குடியிருப்பு அபிவிருத்தி தொடர்பான தேசியக் கொள்கையைத் தயார் செய்வதன் மூலம் நிலையான நகரக் குடியிருப்பு அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களில் வாழும் நமுதாயத்தின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான அணுகுமுறையை ஏற்படுத்தி தற்போது காணப்படுகின்ற வீட்டு அலகுகளை மேம்படுத்தல் அல்லது மிகவும் நல்லதொரு வீட்டு வசதியை பெற்றுக் கொடுப்பதற்கான நிகழச்சித்திட்டங்களைத் தயார் செய்து அமுல்படுத்துவதாகும். மேற்படி நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் ஆரம்பம் முதல் 2015 ஆம் ஆண்டின் இறுதி வரையும், எதிர்காலத்திலும் பௌதீக மற்றும் மனித அபிவிருத்தி ஆகிய அணுகுமுறைகளின் கீழ் நிகழ்ச்சித்திட்டங்களைத் திட்டமிடல் மற்றும் அமுல்படுத்தவது மேற்கொள்ளப்படுகின்றது.

பௌதீக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் சுனாமி அனர்த்தம் மற்றும் கடலரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ள சமுதாயத்தினருக்கு தீர்வு வழங்குவதற்காக ரூ.மி. 1255.57 ஆன செலவில் நிர்மாணிக்கப்பட்ட அங்குலான சயுரபுர தொடர்மாடி வீடமைப்புத் திட்டத்தின் வேலைகள் நிறைவு செய்யப்பட்டு பயனாளிகள் 223 பேருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 2015 ஆம் ஆண்டின் இறுதியில் அவை பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன. மேலும் இந்த அங்குலான சயுரபுர தொடர்மாடி வீடுமைப்புத் திட்டத்தின் மூலம் அங்குலான இயற்கை கடற்கரையிலிருந்த தற்காலிகக் குடியிருப்பாளர்களை விடுவித்து தேசத்துக்குப் பெற்றுக் கொடுக்க முடிந்துள்ளமை நாம் பெற்ற மற்றொரு வெற்றியாகும்.

சிலாபம் நரியாகொடெல்ல நகர மீள்வீடமைப்புமயமாக்கல் கருத்திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு மக்களிடம் கையளிப்பதும் நிறைவு செய்யப்பட்டதுடன், அதன் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி தொடர்பில் குடிநீர் பெற்றுக் கொடுத்தல், மின்சாரம் வழங்கல் மற்றும் மலசலகழிவகற்றும் கட்டமைப்பை ஏற்படுத்தல் ஆகிய பணிகளுக்கான திட்டங்களைத் தயார் செய்தல் மற்றும் அமுல்படுத்துவதும் 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

குறைந்த வசதிகளைக் கொண்ட நகர்ப்புற சமுதாயத்தினருக்கு வீடமைப்புத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் அமுல்படுத்தப்பட்டுள்ள 356 வீட்டு அலகுகளைக் கொண்ட மொரட்டுவை லுனாவ தொடர்மாடி வீடமைப்புத் திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 2015.12.31 ஆம் திகதிக்கு 62ஸஆகும் என்பதுடன், ரூ.மி. 840.37 ஆன நிதிசார் முன்னேற்றத்தையும் அடைந்துகொள்ள முடிந்துள்ளது. மேலும் மேற்படி நோக்கத்துக்காக அமுல்படுத்தப்பட்ட தலவாக்கலை லிந்துல நகர மீள்வீடமைப்புமயமாக்கல் கருத்திட்டத்தின் முன்னேற்றம் 2015.12.31 ஆம் திகதிக்கு 80ஸஆன பௌதீக முன்னேற்றம் மற்றும் ரூ.மி. 77.21 ஆன நிதிசார் முன்னேற்றத்தை அடைந்துகொள்ள முடிந்துள்ளது.

2012 இல் ஆரம்பிக்கப்பட்ட ஜனசெவண திறிய நகர வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் 1 ஆம் கட்டத்தின் மூலம் கொழும்பு மாவட்டத்தில் வீட்டு உரிமையாளர்கள் 252 பேரின் வீடமைப்புத் தேவை

பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், 2014 இன் இறுதியில் ஆரம்பிக்கப்பட்ட ஜனசெவண திறிய நகர வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் 11 ஆம் கட்டத்தின் மூலம் பயனாளிகள் 180 பேருக்கு 6ஸ ஆன நிவாரண வருடாந்த வட்டி அடிப்படையில் உச்சளவாக ரூபா 200,000 எனும் வரையறைக்கு உட்பட்டு வீடமைப்புக் கடன் பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன், 2015.12.31 ஆம் திகதிக்கு 90ஸ ஆன முன்னேற்றம் அடையப் பெற்றுள்ளது.

மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2011 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட நகரக் குடியிருப்புக்களில் வாழும் குறைந்த வருமானம் பெறுகின்ற சமுதாயத்தை இலக்காகக் கொண்ட பல நிகழ்ச்சித்திட்டங்களை மிகவும் வெற்றிகரமாக அமுல்படுத்த முடிந்ததுடன், அவற்றில் உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு இம்முறை மிகவிமர்சையாக “திறந்த வெளி யாவருக்கும்” எனும் தொணிப்பொருளின் கீழ் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டதுடன், நகரக் குடியிருப்புக்களிலுள்ள சமுதாயத்தை பிரதிநிதித்துவம் செய்கின்ற சிறுவர்கள், இளைஞர்கள், யுவதிகளை மையமாகக் கொண்டு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

மேலும், 2015 ஆம் ஆண்டில் ஆரம்பத்தில் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததையடுத்து அரசாங்கத்தின் எண்ணக்கருவுக்கு அமைய சகல துறைகளையும் உள்ளடக்கும் வகையில் மற்றும் முழு நாட்டையும் உள்ளடக்கியதாக அமுல்படுத்தப்பட்ட 100 நாள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நகரக் குடியிருப்புக்களில் வாழும் சமுதாயத்தினரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டதுடன், அவற்றில் கூட்டாட்சி ஆதனங்களின் பராமரிப்பு, முகாமைத்துவம் மற்றும் வீடமைப்புமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் கொழும்பு, மொரட்டுவை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாநகர சபை அதிகாரப் பிரதேசங்கள் மற்றும் சிலாபம், தலாவாக்கலை – லிந்துல ஆகிய நகர சபை அதிகாரப் பிரதேசங்களை உள்ளடக்கும் வகையில் நகரக் குடியிருப்புக்களின் பக்கத் தோற்றப்பாடுகளை உருவாக்கல், ஒவ்வொரு குடியிருப்புக்குமென சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களைத் தாபிப்பதும் மேற்கொள்ளப்பட்டது.

சமுதாய செயற்றிட்டங்களை திட்டமிடும் செயலமர்வுகள் ஒவ்வொரு குடியிருப்பையும் உள்ளடக்கும் வகையில் அமுல்படுத்த வேண்டியதன் தேவையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 20 குடியிருப்புக்களில் வள நிலையங்களைத் தாபித்தல் மற்றும் இனங்காணப்பட்ட மேலும் 05 குடியிருப்புக்களுக்கு சமுதாய வள நிலையங்களைத் தாபிப்பதற்கான ஆரம்பத் திட்டங்களைத் தயார் செய்தல் போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

அதற்கமைய, 2015 ஆம் ஆண்டு முழுவதிலும் அதிகார சபையின் நோக்காக உள்ள, “நிலைபேறான நகரக் குடியிருப்புக்களில் உயர்மட்ட வாழ்க்கைத் தரத்தை உறுதி செய்தல்” எனும் நோக்கத்தை அடைந்துகொள்வதை இலக்காகக் கொண்ட பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மிகவும் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்ட ஆண்டாகக் குறிப்பிட முடியும்.

**தவிசாளர்**

**நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை**

**பணிப்பாளர் சபை அறிக்கை**

2015.12.31 ஆம் திகதிக்கு நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் சபை பின்வருமாறாகும்.

திரு யூ.ஜே. குருகுலரத்ன

தவிசாளர்

திரு ஆர்.எஸ். கஹவல

பணிப்பாளர் சபை செயலாளர்

திரு டி.ஏ.பி. அபேசேகர

பணிப்பாளர்

திரு நிஹால் பெர்ணாந்து

பணிப்பாளர்

திரு எல்.எஸ். பலங்சூரிய

பணிப்பாளர்

திரு கே.ஏ.எஸ். வல்பொல

பணிப்பாளர்

திரு டபிள்யு.எம். குணரத்ன

பணிப்பாளர்

கலாநிதி மஹீம் மெண்டிஸ்

பணிப்பாளர்

திரு ஈ.எல்.டபிள்யு. சமரசிங்க

பணிப்பாளர்

திரு ஏ.கே.பி. விஜித் சந்திம

பணிப்பாளர்

திரு டி.ஏ. காமினி

பணிப்பாளர்

திரு ஏ. சந்தியாகோ

பணிப்பாளர்

மீளாய்வு ஆண்டில் 12 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. பணிப்பாளர் சபையின் உபகுழுவாக செயற்பட்டு வருகின்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு 2015ம் ஆண்டில் 03 கூட்டங்களை நடாத்தியுள்ளது. பணிப்பாளர் சபை அங்கத்தவர்களான கீழே பெயர்குறிப்பிடப்பட்டுள்ள பணிப்பாளர்கள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அங்கத்தவர்களாக செயற்பட்டு வருகின்றனர்.

திரு டி.ஏ.பி. அபேசேகர – தவிசாளர்

கலாநிதி மஹீம் மெண்டிஸ்

திரு ஏ.கே.பி. விஜித் சந்திம

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் குறைந்த வசதிகளைக் கொண்ட நகரக் குடியிருப்புகளில் வாழும் மக்களுக்கு வீடமைப்பு தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் நகர்ப்புறப் பிரதேசங்களில் அமைந்துள்ள வாழ்வதற்கு பொருத்தமற்ற வீடமைப்புக்களை உயர்தரம்மிக்கதாக மேம்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. அத்துடன் நகரக் குடியிருப்புகளில் வாழும் மக்களின் சமூக, பொருளாதார நிலைமை அபிவிருத்தி செய்வதற்கான மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமும் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

1971இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 12வது மற்றும் 13.6வது பிரிவுகளுக்கு அமைய நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படுகின்ற சகல கொடுக்கல் வாங்கல்களையும் முறையாக கணக்குகளில் பதிவுசெய்து கணக்குப் பதிவேடுகளை பேணிவருவதை உறுதிப்படுத்தும் பொறுப்பு மற்றும் அதிகாரசபையின் கணக்கு நடவடிக்கைகள் மற்றும் குறித்த ஆண்டக்கான மிகை ∴ குறை பற்றிய உண்மையான நியாயமான கருத்தை பெற்றுக்கொடுக்கின்ற நிதிக்கூற்றுக்களை தயார்செய்ய வேண்டிய பொறுப்பு அதிகார சபையின் பணிப்பாளர் சபையினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

அதற்கமைய முறையாக கணக்கு பதிவேடுகளைப் பேணிவருமாறும், நாளாந்தம் நடாத்தப்படுகின்ற கூட்டங்கள் மற்றும் கணக்காய்வுக்குழுக் கூட்டங்களின் ஊடாக நிதி அறிக்கையிடல் முறையியலை மீளாய்வு செய்யுமாறும் பணிப்பாளர் சபை அதிகார சபைக்கு கட்டளையிட்டுள்ளது.

இந்த ஆண்டறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயார்செய்யும்போது ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும் ஏற்புடையவாறு உரிய கணக்கீட்டு தர நியமங்களை ஏற்புடையதாக்கிக் கொள்வதற்கும் நியாயமாகவும் அறிவுபூர்வமான தீர்மானங்கள் மற்றும் மதிப்பீடுகளின் மூலம் உறுதிப்படுத்திக்கொள்வதற்கும் பணிப்பாளர் சபை கவனம் செலுத்தியுள்ளது.

அதிகாரசபைக்கு உரித்தான சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும் மோசடி மற்றும் ஏனைய முறைகேடுகளை கண்டறிதல் மற்றும் அவற்றைத் தடுத்துக்கொள்வதற்கும் பணிப்பாளர் சபை நடைமுறையில் தாம் மேற்கொள்ளக்கூடிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. இது

தொடர்பில் செயற்படும்போது பணிப்பாளர் சபையினால் அதிகாரசபையின் சொத்துக்களை பாதுகாத்துக் கொள்வதற்கும் அதன் அறிக்கைகள் பற்றிய உண்மைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை நடைமுறைக்கு சாத்தியமானவாறு முடிந்தளவுக்கு பாதுகாத்துக்கொள்ளக்கூடிய வகையில் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் சேவைகளை முறையாகவும் நிறைவேற்றத் தேவையான உள்ளக பரிசீலனைகள், உள்ளக கணக்காய்வு, நிதி மற்றும் ஏனைய கட்டப்பாடுகளைக் கொண்ட விளைதிறனும் பூரணத்துவமும்மிக்க உள்ளக கட்டுப்பாட்டுக் கட்டமைப்பு தாபிக்கப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபையின் கட்டளைக்கு அமைய**
**பணிப்பாளர் சபையின் செயலாளர்**

பணிப்பாளர் நாயகம்
நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை

## கணக்காய்வுக் குழு அறிக்கை

நல்ல நிதியியல் அறிக்கையிடல் முறையியல் காணப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக மற்றும் முகாமைத்துவம் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சரியான, பொருத்தமான இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை பெற்றுக்கொடுக்கக்கூடிய வகையில் அதனை நல்ல முறையில் முகாமைத்துவம் செய்வதை உறுதிப்படுத்துவதற்கும் சட்டங்கள் மற்றும் அதிகார சபையின் கொள்கைகள் மற்றும் நியாயாதிக்க மற்றும் கூட்டிணைக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கு ஏற்புடையவாறு கணக்கீட்டு மற்றும் உள்ளக கட்டுப்பாட்டை முகாமைத்துவம் செய்வதற்கும் மீளாய்வு செய்தல் மற்றும் கண்காணிப்புச் செய்யும் அதிகாரம் கணக்காய்வுக் குழுவுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் திறைசேரி பிரதிநிதி மற்றும் ஏனைய பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் 02 பேரை உள்ளடக்கியதாக கணக்காய்வுக்குழு தாபிக்கப்பட்டுள்ளது. அரசாங்க தொழில் முயற்சிகள் பற்றிய வழிகாட்டல்களுக்கு அமைய பணிப்பாளர் சபையின் திறைசேரி பிரதிநிதி, மேலதிகப் பணிப்பாளர் நாயகம் – வெளிநாட்டு வளங்கள் திணைக்களம், திரு டி.ஏ.பி. அபேசேகர 2015 ஆம் ஆண்டின் குழுத்தவிசாளராக செயற்பட்டார். கலாநிதி மஹீம் மெண்டிஸ் மற்றும் திரு ஏ.கே.பி. விஜித் சந்திம ஆகியோா் குழுவின் அங்கத்தவர்களாக செயற்பட்டு வந்தனர்.

அரசாங்கத்தின் கணக்காய்வு அத்தியட்சகர் ஒருவர் அவதானிப்பாளராக கணக்காய்வு குழுக் கூட்டங்களில் பங்கேற்றதுடன் தேவையானவாறு நகரக் குடியிருப்பு அதிகாரசபையின் ஏனைய அலுவலர்கள் பலர் இந்தக் கூட்டங்களில் பங்கேற்றனர். அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் இந்த குழுவின் செயலாளராக செயற்பட்டார். உள்ளக கணக்காய்வாளரினால் தயார்செய்யப்பட்ட 2015 ஆம் ஆண்டுக்கான விரிவான கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் இந்தக் குழுவினால் ஆராயப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மீளாய்வு ஆண்டில் இந்த குழுவின் 03 கூட்டத் தொடர்கள் நடாத்தப்பட்டுள்ளன. கணக்காய்வுகள் அறிக்கைகள், கணக்காய்வு வினாக்கள் தொடர்பிலான கேள்விகள் மற்றும் பதில்கள், உள்ளக மற்றும் வெளிப்புற கணக்காய்வுகளின் அவதானிப்புகள், உலக கட்டுப்பாட்டுக் கட்டமைப்புகள் மற்றும் ஆண்டறிக்கையை உரிய நேரத்திற்கு தயார்செய்து சமர்ப்பிக்க வேண்டியதன் தேவை பற்றி விசேட கவனம் செலுத்துவது உள்ளடங்கலாக மேம்படுத்துவதற்குத் தேவையான ஏனைய துறைகள் பற்றி இந்தக் குழு கலந்துரையாடியுள்ளது. தேவையாவாறு சீராக்கல்களை செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு ஏற்புடையவாறு பின்னாய்வு நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள் பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடப்பட்டுள்ளன.

அங்கத்தவர்கள் மற்றும் அலுவலர்கள் வழங்கிய பெறுமதிமிக்க பங்களிப்பு மற்றும் குறிப்பாக கணக்காய்வு செய்முறையின் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதி வழங்கிய மிகமுக்கிய

அவதானிப்புகள் தொடர்பிலும் நான் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கட்டளைக்கமைய

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் செயலாளர்

பணிப்பாளர் நாயகம்

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை

**அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் - 2015**

2015 ஆம் ஆண்டில் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் பின்வரும் வகையில் மூன்று அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

1. பௌதீக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

    1.1 நகர குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புகளில் உள்ள மக்களுக்கான மீள் வீடமைப்புமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டம்

2. நகர்ப்புற பிரதேசங்களில் அமைந்துள்ள தற்காலிக மற்றும் பகுதியளவான நிரந்தர வீடுகளை தரமான வீடுகளாக மாற்றியமைக்கும் “ஜனசெவன திறிய” நகர வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்

3. “ஜனசெவன சுயசக்தி” மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

## பௌதீக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

### அங்குலான மீள்வீடமைப்புமயமாக்கல் கருத்திட்டம்





சுனாமி அனர்த்தம் மற்றும் கடலரிப்பினால் இடம்பெயர்ந்துள்ள சமுதாயத்தினருக்கு வீடமைப்புத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக ரூ.மி. 1,255.578 ஆன கருத்திட்டச் செலவினத்துடன் 288 வீட்டு அலகுகளைக கொண்டதாக நிர்மாணிக்கப்பட்ட இந்த வீடமைப்புக் கருத்திட்டம் 2014 நவம்பர் 18 ஆம் திகதி மக்களிடம் கையளிக்கப்பட்டது. 2015.1231 ஆம் திகதி வரை பயனாளிகள் 223 பேருடன் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

தொடர்மாடி வீடுகளின் வாழ்க்கை முறை பற்றி சமுதாயத்தை விழிப்புணர்வூட்டல் உட்பட மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களும் சமுதாயத்தை வலுவூட்டுவதற்காக அமுல்படுத்தப்படுகின்றன. இந்த தொடர்மாடி வீடமைப்புக் கருத்திட்டம் அங்கலான கரையோர வலயத்தை விடுவித்துக் கொள்வதற்கும் பங்களிப்புச் செய்துள்ளது.

## சிலாபம் வீடமைப்புமயமாக்கல் கருத்திட்டம்





சிலாபம் நகரத்தின் மத்தியில் குறைந்த வசதிகளுடன் வாழ்ந்துவந்த சிலாபம் நகர சபை தொழிலாளர் சமுதாயத்தினருக்கு வீடமைப்புத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் அச்சமுதாயத்தினரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் சிலாபம் வீடமைப்புமயமாக்கல் கருத்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. இங்கு தனி வீட்டு அலகுகள் 57 காணப்படுவதுடன், ரூ.மி. 60.54 ஆன மொத்த மதிப்பீட்டுச் செலவினத்துடன், 2014 டிசம்பர் மாதம் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டன. 2015 உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அதாவது, மின்சாரம் வழங்கல், அடிக்கடி வெள்ள அச்சுறுத்தலுக்கு உட்படுகின்ற கருத்திட்டப் பூமிக்கு முறையான வடிகாலமைப்பைத் தயார் செய்யவும் திட்டமிடப்பட்டது.

## லுனாவ வீடமைப்புக் கருத்திட்டம்





குறைந்த வசதிகளின் கீழ் வாழும் சமுதாயத்தினருக்கு நிரந்தர வீடமைப்புத்தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடன் மொரட்டுவை லுனாவ கிராம அலுவலர் பிரிவில் 12 மாடிகளும் (பூ11)356 வீட்டு அலகுகளையும் கொண்டதாக ரூ.மி. 1,369.316 ஆன மொத்த நிதி மதிப்பீட்டுடன் லுனாவ வீடமைப்புக் கருத்திட்டம் நிர்மாணிக்கப்படுகின்றது. 2015 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு 62%ஆன திரண்ட பௌதீக முன்னேற்றம் மற்றும் ரூ.மி. 840.375 ஆன திரண்ட நிதிசார் முன்னேற்றம் அடையப்பெற்றுள்ளது. 2016 ஆம் ஆண்டில் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

## தலவாக்கலை– லிந்துல வீடமைப்புமயமாக்கல் கருத்திட்டம்





இக்கருத்திட்டத்திற்கு மேல்லையின் குடியிருப்பு மற்றும் பழைய சந்தைக்கு அருகேயுள்ள காணியில் இருந்த குடியிருப்புக்களில் வாழும் சமுதாயத்தினர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலவாக்கலை லிந்துல நகர சபை அதிகாரப் பிரதேசத்தின் "ஹொலிரூட்" தோட்டம் எனும் காணியில் திருத்திய மொத்த மதிப்பீட்டுச் செலவினமான ரூ.மி. 78.40 இல் 54 வீட்டு அலகுகளைக் கொண்டதாக தலவாக்கலை லிந்துல வீடமைப்புமயமாக்கல் கருத்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது. 2015 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ஒட்டுமொத்த திரண்ட பௌதீக முன்னேற்றம் 80% ஆகும். (மொத்த நிர்மாணிப்புச் செலவினத்தின் அடிப்படையில் பௌதீக முன்னேற்றம் 90% ஆகும்.) திரண்ட நிதிசார் முன்னேற்றம் ரூ.மி. 77.21 ஆகும்.

## ஜனசெவண திறிய நகர வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் கட்டம் - II

2014 வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகளான ரூ.மி.38.00 இன் மூலம் 2014 அக்டோபர் மாதம் வீடமைப்புக் கடன்களை இனங்காணும் ஆய்வுடன் ஜனசெவண திறிய நகர வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் கட்டம் - II ஆரம்பிக்கப்பட்டது. பயனாளிகள் 180 பேருக்கு குறைந்த வட்டியின் கீழ் (நிருவாக மற்றும் ஏனைய செலவினங்களை உள்ளடக்கியதாக 6% வருடாந்த வட்டி விகிதத்தின் கீழ்) உச்சளவான கடன் தொகை ரூபா 200,000 ஆகும். உச்சளவான கடன் எல்லை 10 வருடங்களாகும். 2015.12.31 ஆம் திகதிக்கு 90%ஆன முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டுள்ளது.

 

பயனாளிகளுடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடல்

## நிறுவனத்தினால் அமுல்படுத்தப்பட்ட 100 நிகழ்ச்சித்திட்டத்தின் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்

100 நாள் நிகழ்ச்சித்திட்டத்தை முன்னிட்டு நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி, கூட்டாட்சி ஆதனப் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம், மீள்வீடமைப்புமயமாக்கல் ஆகிய நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் கொழும்பு, மொரட்டுவை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாநகர சபை அதிகாரப் பிரதேசங்கள் மற்றும் சிலாபம், தலவாக்கலை லிந்துல நகர சபை அதிகாரப் பிரதேசங்களை உள்ளடக்கும் வகையில் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் /கருத்திட்டங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### நகரக் குடியிருப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

100 நாள் நிகழ்ச்சித்திட்டத்தை முன்னிட்டு கொழும்பு நகரத்தில் இனங்காணப்பட்ட குறைந்த வசதிகளைக் கொண்ட 59 நகரக் குடியிருப்புக்களில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் பின்வருமாறாகும்.

- 59 குடியிருப்புக்களுக்கும் நகரக் குடியிருப்புப் பக்கத் தோற்றப்பாடுகளை வடிவமைத்தல்
- ஒவ்வொரு குடியிருப்புக்குள் சமுதாய அடிப்படையிலான ஒரு அமைப்பு என்ற வகையில் சமுதாய அடிப்படையிலான அமைப்புக்கள் 59 இனை தாபித்தல்
- சமுதாய செயற்றிட்டத் திட்டச் செயலமர்வுகள் 59 இனை நடாத்தல்.
- சமுதாய வள நிலையங்கள் 20 ஐ தாபித்தல் மற்றும் திட்டமிடப்பட்டுள்ள எஞ்சிய சமுதாய நிலையங்கள் 05 ஐத் தாபிப்பதற்கான ஆரம்க கட்ட நடவடிக்கைகளை நிறைவு செய்தல்
- ஆரம்ப உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி

சஹஸ்புர வீடமைப்புக் கருத்திட்டம், சிங்கபுர தொடர்மாடி வீடமைப்புக் கருத்திட்டம் (கட்டம் 11), அங்குலான மீள்வீடமைப்புமயமாக்கல் கருத்திட்டம், சிலாபம் வீடமைப்புமயமாக்கல் கருத்திட்டம், தலவாக்கலை லிந்துல வீடமைப்புமயமாக்கல் கருத்திட்டம் - கட்டம் 1 மற்றும் அநுராதபுரும் துறுஇத்துறுகம பசுமை வீடமைப்புக் கருத்திட்டம் ஆகிய கருத்திட்டங்களில் 100 நாள் நிகழ்ச்சித்திட்டத்தை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்ட சில நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருமாறு,

## சிங்கபுர தொடர்மாடி வீடமைப்புக் கருத்திட்டம் (கட்டம் ஜஜ)

 

- சமூகத் திரடடல் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தல்
- கூட்டாட்சித் திட்டத்தைத் தயார் செய்தல்.

## அநுராதபுரம் துறுஇத்துறுகம பசுமை வீடமைப்புக் கருத்திட்டம்

 

அநுராதபுரம் புனிதபூமியின் அகழ்வு நடவடிக்கைகளுக்கு, தொல்பொருளியல் திணைக்களத்திற்கு பயனாளிகள் சட்டவிரோமதாக வசித்திருந்த காணிகளை விடுவித்துக் கொடுத்தல்.

- சமூகத் திரட்டல் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தல்.

**<u>அங்குலான மீள்வீடமைப்புமயமாக்கல் கருத்திட்டம்</u>**

- கூட்டாட்சித் திட்டத்தைத் தயார் செய்வதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு கரையோர வலயத்தை விடுவித்துக் கொடுப்பதற்காக மொரட்டுவை பிரதேச செயலகத்துடன் ஒருங்கிணைப்புச் செய்யத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

# சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தினால் பொறுப்பளிக்கப்பட்டுள்ள செயற்பணியொன்றாக குறைந்த வசதிகளைக் கொண்டுள்ள நகரக் குடியிருப்புகளில் வாழும் சமுதாயத்தினரின் சமூக, பொருளாதார, கலாசார அபிவிருத்திக்காக அச்சமுதாயத்தை வலுவூட்டல் மற்றும் மேற்படி சமுதாயத்திலுள்ள சிறுவர்கள், இளைஞர்கள், யுவதிகளின் அறிவு, ஆற்றல்கள் மற்றும் மனப்பாங்கு ரீதியாகவும் சாதகமான பிரவேசத்தில் ஈடுபடுத்தும் பொருட்டு மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்தை நகரக் குடியிருப்பு மட்டத்தில் அமுல்படுத்தும் பொறுப்பு இந்த அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பணிகளை நிறைவேற்றும் பொருட்டு “சுயசக்தி” மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2011ஆம் ஆண்டு முதல் பின்வரும் துறைகளின் ஊடாக அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

- புதிய குடியிருப்புக்களுக்கு பிரவேசித்தல், சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் பற்றி சமுதாயத்தை அறிவுறுத்தல் மற்றும் வீட்டு ஆரம்ப ஆய்வு நடவடிக்கைகள்
- சுயசக்தி சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களைத் தாபித்தல் மற்றும் இற்றைப்படுத்தல்
- சமுதாய சங்கங்களைத் தாபித்தல் மற்றும் வலுவூட்டி சமுதாய செயற்றிட்ட செயலமர்வுகளை நடாத்தல் (100 நாள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ்)
- குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களில் பெண்களை வலுவூட்டல்.
- இளைஞர், யுவதிகளை வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டம்.
- சிறுவர்களின் திறமைகள், மனப்பாங்குகளை விருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டங்கள்.
- சமுதாய மருத்துவ சிகிச்சை முகாம் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்
- சமுதாயத்தினருடன் சிரமதான நிகழ்ச்சித்திட்டங்களை குடியிருப்பு மட்டத்தில் அமுல்படுத்தல்.
- சமய நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- கலாசார நிகழ்ச்சித்திட்டங்கள்
- சமுதாய பங்கேட்பு கௌதீக கருத்திட்டங்களை அமுல்படுத்தல்

2015 ஆம் ஆண்டில் இதன் கீழ் அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

## 01. சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் பற்றி சமுதாயத்தை அறிவுறுத்தல் மற்றும் ஆரம்ப வீட்டு ஆய்வு நடவடிக்கைகள்

### 1.1 கொழும்பு நகர்ப்புறப் பிரதேசத்தில் புதிய குடியிருப்புக்களில் சமூக – பொருளாதார ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் பற்றி குடும்பங்களை அறிவுறுத்தல் மற்றும் சுயசக்தி குடும்பங்களை பதிவுசெய்தல் மற்றும் தகவல்களை பெற்றுக்கொள்வது புதிய குடியிருப்புக்களில் தொடர்ந்தும் 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதுடன் இதன்போது சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள் பற்றி குடியிருப்புகளில் உள்ள சமுதாயத்தை அறிவுறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதற்கமைய 2015 ஆம் ஆண்டு கொழும்பு நகரத்தில் உள்ள 04 வலயங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் 29 குடியிருப்புகளைச் சேர்ந்த 3531 குடும்பங்கள் இந்த நிகழ்ச்சித்திட்டம் பற்றி அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள் என்பதுடன் வீட்டு ஆரம்ப ஆய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொழும்பு நகர வலயத்திற்கு வெளியே திருகோணமலை சமுத்ரகம மீனவர் வீடுகள், ஹம்பாந்தோட்டை – சங்கிந்தகம, செத்சந்தகம, அவிசாவளை – பிரகதிபுர, சீதாஎல்ல பிரதேசங்களை மையமாகக் கொண்டு 660 குடும்பங்களின் சமூக – பொருளாதார ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.





“சுயசக்தி” மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திடடம் பற்றி குடும்பங்களை அறிவுறுத்தல் மற்றும் சுயசக்தி குடும்பங்களைப் பதிவு செய்தல் மற்றும் தகவல்களைப் பெற்றுக் கொள்வதானது புதிய குடியிருப்புக்களில் தொடர்ந்தும் 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதுடன், இதன் போது சுயசக்தி

மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள் பற்றி அவிசாவளை பிரகதிபுர குடியிருப்பு சமுதாயத்தை அறிவுறுத்துவது மேற்கொள்ளப்பட்டது.





## 1.2 திருகோணமலை மாவட்ட குடும்ப ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள் பற்றி குடியிருப்புக்களை அறிவுறுத்தல் மற்றும் குடும்ப ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.





## 1.3 ஹம்பாந்தோட்டை மாவட்ட குடும்ப ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்





## 2.0 சுயசக்தி சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களைத் தாபித்தல் மற்றும் இற்றைப்படுத்தல்

சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், குடியிருப்புக்களில் பிரவேசித்து பலம்மிக்க சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களை இந்த நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புபடுத்திக் கொள்ளல் மற்றும் சமுதாய அடிப்படையிலான அமைப்புக்கள் செயலிழந்துள்ள குடியிருப்புக்களில் சுயசக்தி சமுதாய அபிவிருத்திச் சங்கங்களைக் கட்டியெழுப்புவதன் மூலம் பலமான நிறுவனக் கட்டமைப்பை குடியிருப்புக்களில் தாபிப்பதும் இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

## 2.1 தலவாக்கலை லிந்துல வீடமைப்புக் கருத்திட்டம்

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் கௌரவ சஜித் பிரேமதாச அவர்களின் எண்ணக்கருவுக்கு அமைய "யாவருக்கும் புகலிடம்" வீடமைப்புக் கருத்திட்டத்தின் கீழ் துரித வீடமைப்புக் கருத்திட்டங்களை மக்களிடம் கையளிக்கும் செயன்முறை தற்போது நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் முன்னெடுப்புடன் ஆரம்பிக்கப்பட்ட தலவாக்கலை – லிந்துல வீடமைப்புக் கருத்திட்டம், மேல்லையின் மற்றும் பழைய சந்தை ஆகிய குடியிருப்புக்களைச் சேர்ந்த பயனாளிகளுக்குத் துரிதமாகப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் பிரிவுத் தலைவர்களின் பங்கேட்புடன் சமுதாயக் கூட்டம் மற்றும் நகர சபை அலுவலர்களுடன் கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டதுடன், பின்னர் எமது பதவியணியினர் மேல் லையின் மற்றும் பழைய சந்தைக் குடியிருப்புக்கு விஜயம் மேற்கொண்டனர்.





தவிசாளர் லிந்துல வீடமைப்புக் கருத்திட்டத்தை பார்வையிட்ட போது





பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் மற்றும் பிரிவுத் தலைவர்களின் பங்கேட்புடன் நகர சபை அலுவலர்களுடன் கலந்துரையாடல் நடாத்தப்பட்டமை

## 2.2 அநுரதாதபுரம் - துறுஇத்துறுகம வீடமைப்புக் கருத்திட்டம் - சமுதாயக் கூட்டம்

அநுரதாதபுரம் - துறுஇத்துறுகம வீடமைப்புக் கருத்திட்டத்தின் 2015 ஆம் ஆண்டு தொடர்பான சமுதாய சங்கத்தை இற்றைப்படுத்துவது இதன் போது இடம்பெற்றது. இதில் அரச நிறுவனங்களின் அலுவல்கள் பங்கேற்று பிரதேச செயலகம் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற சேவைகள் தொடர்பாக சமுதாயத்தை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது. மேலும் வீட்டுத் தோட்ட அபிவிருத்தி பற்றியும் கலந்துரையாடப்பட்டது.




## 2.3 திருகோணமலை மாவட்ட சமுதாய சங்கங்களைத் தாபித்தல்




## 2.4. சிலாபம் - நாரியகொடெல்ல வீடமைப்புக் கருத்திட்டம் - சமுதாய கூட்டம்

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு உரித்தான சிலாபம் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் 5 ஏக்கர் 2 ரூட் 4 பர்சஸ் அளவான நாரியகொடெல்ல எனும் காணியின் உரித்தைப் பெற்றுக் கொடுத்ததுடன் மேற்படி காணி தரிசுநிலமான வயற்காணியாக இருந்தது, வீடுகளை நிர்மாணிப்பதற்கு பயன்படுத்திக் கொள்ளப்பட்ட காணிப்பகுதி முற்றாக வெளியிலிருந்து மண் கொண்டுவரப்பட்டு வீடுகளை நிர்மாணிப்பது மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கருத்திட்டம் திட்டமிடப்பட்ட ஆரம்ப சந்தர்ப்பத்தில் சிலாபம் நகர சபையின் தலையீடு மற்றும் இனங்காணப்பட்ட பயனாளிகளை சம்பந்தப்படுத்திக் கொண்டு சமுதாயத்தின் பங்கேட்பின் அடிப்படையில் இந்த வீடுகளை நிர்மாணிப்பது ஆரம்பிக்கப்பட்டது.

இந்தக் கருத்திட்டம் தொடர்பில் 57 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டதுடன், இந்த வீடுகளில் வசிக்கின்ற குடும்பங்கள் பல தசாப்தங்களாக சிலாபம் நகரத்தில் மிகவும் சிக்கலான மற்றும் மோசமான சூழலில் குறைந்த வசதிகளுடன் பொருத்தமற்ற வீடுகளில் வசித்து வந்தார்கள் என்பதுடன், இன்று அவர்கள் அவர்களுக்கு உரித்தான காணித்துண்டொன்றில் முறையாக நிர்மாணிக்கப்பட்டுள்ள ஒரு வீட்டில் வசிப்பதற்கு இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் அவர்களுக்கு ஆற்றல் கிடைத்துள்ளது.

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை இந்தக் குடும்பங்களைத் தொடர்புபடுத்திக் கொண்டு அவர்களில் தாக்கம் செலுத்துகின்ற பொருளாதார மற்றும் சமூகச் சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ளும் நோக்கத்துடன் மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மேற்படி குடும்பங்களின் பங்கேட்புடன் அமுல்படுத்தப்பட்டுள்ளது.





## 2.5 அவிசாவளை பிரகதிபுர சமுதாய கூட்டம்

அவிசாவளை பிரகதிபுர குடியிருப்பின் 2015 ஆம் ஆண்டு தொடர்பில் சமுதாய சங்கத்தை இற்றைப்படுத்துவது இதன் போது மேற்கொள்ளப்பட்டது. இதில் சமூக திரட்டல் பிரிவின் அலுவலர்கள் பங்கேற்றதுடன், சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக சமுதாயத்தை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டமும் அமுல்படுத்தப்பட்டது.





## 2.6 “யாவருக்கும் புகலிடம்” மாதிரிக் கிராம நிகழ்ச்சித்திட்டம்

### 2.6.1 ஹம்மாத்தோட்டை மாவட்ட சமுதாய சங்கத்தைத் தாபித்தல் - “சங்கிந்தகம”குடியிருப்பு

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் கௌரவ சஜித் பிரேமதாச அவர்களின் எண்ணக்கருவுக்கு அமைய “யாவருக்கும் புகலிடம்” வீடமைப்புக் கருத்திட்டத்தின் கீழ் ஹம்பாந்தோட்டை நைட் பசார் காணியில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் 30 பேருக்கு 30 வீடுகளை நிர்மாணிக்க அடிக்கல் நாட்டப்பட்டது. இன்று சங்கிந்தியாகம எனும் பெயரைக் கொண்ட கருத்திட்டப் பூமியில் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலையீட்டின் கீழ் மற்றும் சமூகத் திரட்டல் பிரிவின் பூரண வழிகாட்டலின் கீழ் இச்செயற்பாடு மிகவிரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நிரந்தர வீடுகள் இல்லாத குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களுக்காக அமுல்படுத்தப்படுகின்ற இந்த வீடமைப்புக் கருத்திட்டத்தை, குறிப்பாக அவர்களின் ஊழியப் பங்களிப்பு மற்றும் பங்கேட்பின் கீழ் மேற்கொள்ள விசேட வழிகாட்டல் மற்றும் அவர்களை ஊக்குவிப்பது எமது நிறுவனத்தின் சமூகத் திரட்டப் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. குறிப்பாக கருத்திட்டத்தின் ஆரம்பத்தில் சமுதாய அபிவிருத்திச் சங்கங்களைத் தாபித்து சமுதாய அமைப்புக்களின் பலம் மற்றும் நற்புறவை வளர்த்தல், சமுதாயத்தின் சக்திகளை அவர்களுக்கு அறிமுகம் செய்துவைத்தல், ஆகக் குறைந்த நிதிப் பங்களிப்பு மற்றும் உச்சளவான ஊழியப் பங்களிப்புடன் வீடுகளை நிர்மாணிக்க சமுதாயத்தை ஊக்குவிப்பது தற்போது சமூகத் திரடட்ல் பிரிவின் ஊடாக அமுல்படுத்தப்படுகின்றது.





### 2.6.2 ஹம்மாத்தோட்டை மாவட்ட சமுதாய சங்கத்தைத் தாபித்தல் - “செத்சந்தகம” குடியிருப்பு

அதற்கமைய, யாவருக்கும் புகலிடம் வீடமைப்புக் கருத்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட மற்றொரு கருத்திட்டமாக யூல்கமுவ – பல்லெமலல பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன், இது “செத்சந்தகம” வீடமைப்புக் கருத்திட்டம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. பயனாளிகள் 25 பேரைக் கொண்ட செத்சந்தகம வீடமைப்புக் கருத்திட்டம் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் சகல பிரிவுகளினதும் தலையீட்டுடன் தற்போது ஆரம்பிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.





**03. சமுதாய சங்கங்களைத் தாபித்து மற்றும் வலுவூட்டி சமுதாய நடவடிக்கைச் செயலமர்வுகளை நடாத்தல் (100 நாள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ்)**

100 நாள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறைந்த வசதிகளைக் கொண்ட 70 குடியிருப்புக்களைத் தொடர்புபடுத்திக் கொண்டு சமுதாயத்தினர் தாம் எதிர்கொண்டுள்ள சிக்கல்கள் மற்றும் தேவைகளை இனங்காண்பதற்கு உதவுவதும், மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய விழிப்புணர்வைப் பெற்றுக் கொடுப்பதற்குமான சமுதாய நடவடிக்கைச் செயலமர்வுகளை நடாத்துவதும் இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்டது.
அதற்கமைய 04 வலயங்களை உள்ளடக்கும் வகையில் சமுதாய நடவடிக்கை செயலமர்வுகள் 63 கலந்துரையாடல் மட்டத்தில் தயார் செய்யப்பட்ட சமுதாய அடிப்படையிலான திட்டத்தை உரிய நிறுவனங்களின் ஒத்துழைப்பு மற்றும் வளப் பங்களிப்புடன் அமுல்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டல்களும் இதன் போது சமுதாயத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டது.





"திறியட்ட திறியக் சுயதொழில்வாய்ப்புக்கான உதவி"

## 4.0 குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களிலுள்ள பெண்களை வலுவூட்டல்

### 4.1 நகர்ப்புற குறைந்த வருமான குடும்பங்களுக்கு தொழில்முயற்சிசார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அதிவேக தையல் இயந்திரங்களை பெற்றுக் கொடுத்தல்.

எமது அதிகார சபையினால் அமுல்படுத்தப்பட்டுள்ள மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நகர்ப்புறக் குடும்பங்களின் பொருளாதார வளர்ச்சிக்கான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் கடந்த சில ஆண்டுகளில் அமுல்படுத்தப்பட்டுள்ளன. இதன் போது தமது சுயதொழில்வாய்ப்பாக ஆடை தைத்தல் மற்றும் அது தொடர்பான தொழில்முயற்சிகளில் ஈடுபட்டுள்ள 87 பேருக்கு அதிவேக தையல் இயந்திரங்களை கையளிப்பதும் இடம்பெற்றது.

மேற்படி பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்களை வழங்குவதற்காக செலவிடப்பட்ட தொகை 37 தவணைகளாக வட்டியின்றி மேற்படி தொகைக்குச் சமமான தவணைப்பணமாக அறவிட்டுக் கொள்ளும் செயன்முறை தையல் இயந்திரங்களை வழங்கிய திகதியிலிருந்து 03 மாதங்கள் கடந்த பின்னர் உரிய அறவிடுகள் மேற்கொள்ளப்படுவதுடன், அது பற்றிய பின்னாய்வுச் செயன்முறையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.





### 4.2 குறைந்த வருமானம்பெறும் பெண்களுக்கு சுயதொழில்வாய்ப்புக்கான உதவி ...

கொழும்பு நகர அதிகாரப் பிரதேசத்தில் வாழும் பெண்களின் திறமைகள் மற்றும் ஆற்றல்களை பாராட்டி மேற்படி ஆற்றல்களுக்கு உதவுதல் மற்றும் வளங்களை பெற்றுக் கொடுப்பது நிறுவனங்கள், அலுவலர்களின் ஒருங்கிணைப்பு மற்றும் இலங்கை சாரணியர் சங்கத்தின் முன்னெடுப்புடன் மேற்கொள்ளப்பட்டது.

சுயதொழில் ஆற்றல்களின் மூலம் தொழில்வாய்ப்புக்கான வழியைக் காட்டி குடும்பத்தின் பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்கின்ற பெண்களை நகரத் துறையில் உருவாக்குதல் மற்றும் பெண் என்ற வகையில் எழுந்திருக்கத் தேவையான வழிகாட்டல்கள் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் பெற்றுக்கொடுக்கப்பட்டது.





"நிபுணத்துவத்தைப் பெறுங்கள் - வாழ்கையை வென்றிடுங்கள்"

## 5.0 இளைஞர், யுவதிகளை வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டம்

### 5.1 ஆற்றல்களுக்கு உதவி வழங்கும் தொழில்பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

கொழும்பு நகர குறைந்த வசதிகளைக் கொண்ட நகரக் குடியிருப்புக்களில் இளைஞர், யுவதிகள் தமது பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த பின்னர் தமது தொழில்சார் வாழ்க்கையை வெற்றிகரமாக்கிக் கொள்ளத தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் போக்கு குறைவான மட்டத்தில் காணப்படுவதுடன், பெரும்பாலும் பயிற்றப்படாத தொழில்வாய்ப்புக்களில் ஈடுபடும் போக்கைக் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

அதற்கமைய மேற்படி இளைஞர், யுவதிகளை அறிவுறுத்தி தமது ஆற்றல்களுக்குப் பொருத்தமான தொழில்சார் பாடநெறிகளைக் கற்றுக் கொள்ளத்தேவையான வழிகாட்டல் எமது அதிகார சபையினால் பெற்றுக் கொடுக்கப்படுவதுடன், தேசிய பயிலுனர் மற்றும் தொழில் பயிற்சி அதிகார சபையுடன் (யுேஜவயு) இணைந்து மாளிகாவத்தை பிரதீபா மண்டபத்தில் இதன் அங்குரார்ப்பண வைபவம் நடாத்தப்பட்டது. அன்றைய தினம் இளைஞர் யுவதிகளுக்கு நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு 112 பேர் அவர்களின் திறமைகளுக்கு அமைய பல்வேறு பாடநெறிகளுக்கு தெரிவு செய்யப்பட்டார்கள்.

இதற்கமைய, ஜோன் கீல்ஸ் நிறுவனம், ஹெலத் கார்ட் நிறுவனம், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் போன்ற நிறுவனங்களுக்கு இளைஞர் யுவதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.





## 5.2 மோட்டார் வாகன மற்றும் முச்சக்கர வண்டி தொடர்பிலான பயிற்சிப் பாடநெறியில் இளைஞர்களை ஈடுபடுத்தல்.

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நகரக் குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களில் வாழும் சமுதாயத்தின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான பல்வேறு மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பௌதீக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் பல மிக வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. இளம் சமுதாயத்தினரின் கோரிக்கைக்கு அமைய மோட்டார் வாகனம் மற்றும் முச்சக்கரவண்டிக் கைத்தொழில்துறையில் பயிற்சிப் பாடநெறியொன்று 04 வலயங்களையும் உள்ளடக்கும் வகையில் நடாத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு வளவாளர் நிறுவனமாக டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி முன்னின்று செயற்பட்டது.






## 5.3 இளைஞர் சங்கங்களைத் தாபித்தல்

சமூகத் திரட்டல் பிரிவின் அலுவலர்களின் தலையீட்டுடன் திருகோணமலை – சமுத்திரகம குடியிருப்பின் இளைஞர்களை ஒன்றுதிரட்டி "சாகர" இளைஞர் சங்கம் தாபிக்கப்பட்டது.





## 5.4 “சுயசக்தி” இளைஞர்களுக்கு புதியதொரு வழி ..................

### இளைஞர் திறன் மற்றும் தலைமைத்துவ மனப்பாங்கு பயிற்சி மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம்

இளைஞர், யுவதிகள் என்பவர்கள் எதிர்கால சவாலின் ஒரு பங்காளராவார்கள். அவர்கள் எப்போதும் சமூகத்தை மாற்றியமைக்கும் பணியில் ஈடுபடுகின்றவர்களாவார்கள். புதிய கருத்துக்கள் மற்றும் மட்டில்லா உடல்பலத்திற்கு இயற்கையாகவே உரிமைகொண்டுள்ளனர். இவர்கள் மனிதர்களில் பிறக்கின்ற பலம்மிக்க உயிரினங்களாகும்.

பல்வேறு விளையாட்டுக்களிலிருந்து வாழ்க்கையை புரிந்துகொள்வதற்கும், சவால்களை வென்றெடுப்பதற்கும், முனைப்புடன் செயற்படும் இளைஞர்களை கட்டிஎழுப்புவதற்குமுள்ள ஆற்றல் தொடர்பில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் சிறந்த புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ளும் ஆற்றல் கிடைக்கின்றது. இன்று பெரும்பாலான இளைஞர், யுவதிகள் தமதுக்கு உரித்தான சமூக வாய்ப்புக்களைத் தவறவிட்டு செயற்படுவதனால் அவர்கள் வழிதவறியுள்ளமை பற்றியும் கவனம் செலுத்தியதை அடுத்து, முன்னைய இளைஞர்களை விடவும் தற்கால இளைஞர்களுக்கு சமூக வாய்ப்புக்கள் பாரியளவில் உருவாகியுள்ளன.





## 5.5 உலகக் குடியிருப்புத் தினக் கொண்டாட்டம் - 2015

### அணிக்கு ஆறுபேர் கொண்ட “சுயசக்தி” மென்பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டி

“சுயசக்தி” மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமானது கொழும்பு நகரில் குறைந்த வசதிகளைக் கொண்ட நகரக் குடியிருப்புக்களில் வாழும் சமுதாயத்தின் மனித அபிவிருத்தி மற்றும் பௌதீக அபிவிருத்தியை நிறைவு செய்வதற்காக அமுல்படுத்தப்பட்டுள்ளதொரு நிகழ்ச்சித்திட்டமாகும்.

உலகக் குடியிருப்புத் தினத்தை முன்னிட்டு இளைஞர், யுவதிகளின் விளையாட்டு ஆற்றல்களை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு நடாத்தப்படுகின்ற அணிக்கு ஆறுபேர் கொண்ட “சுயசக்தி” மென்பந்து கிரிக்கட் சுற்றுப் போட்டி நகர்ப்புற இளைஞர், யுவதிகளின் ஆற்றல்களை வளர்த்துக் கொள்வதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது என்பது தெளிவானதாகும்.

மேலும் 2015 ஆம் ஆண்டிலும் உலகக் குடியிருப்புத் தினத்தை முன்னிட்டு அணிக்கு ஆறுபேர் கொண்ட “சுயசக்தி” மென்பந்து கிரிக்கட் சுற்றுப் போட்டியின் ஆரம்பச் சுற்றுப் போட்டிகள் ஆகஸ்ட் மற்றும் செப்தெம்பர் மாதங்களில் நடாத்தப்பட்டதுடன், ஆண்களின் 171 அணிகளும், பெண்களின் 31 அணிகளுமாக மொத்தம் 202 அணிகள் இச்சுற்றுப்போட்டிக்கு பதிவு செய்திருந்தன.

இந்த சுற்றுப்போட்டியின் நடுவர்களாக இலங்கைப் பாடசாலை மென்பந்து கிரிக்கட் சம்மேளன அலுவலர்கள் செயற்பட்டனர்.





## 6.0 சிறுவர் திறமைகள், மனப்பாங்கினை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்

**சிறுவர் தலைமைத்துவம், திறமை, சாதகமான மனப்பாங்கினை மேம்படுத்தும் நடவடிக்கைகளுக்காக சிறுவர் கழகங்களைத் தாபித்தல் மற்றும் இற்றைப்படுத்தல்**

### 6.1 சிறுவர் கழகங்களைத் தாபித்தல் - கொழும்பு மாவட்டம்

நகரக் குடியிருப்புக்களிலுள்ள பிள்ளைகளின் அறிவு, ஆற்றல் மற்றும் மனப்பாங்கினை வளர்க்கும் நோக்கத்துடன், சுயசக்தி சிறுவர் கழகங்களை கட்டியெழுப்பி சிறுவர் நிகழ்ச்சித்திட்டங்களை குடியிருப்புக்களில் அமுல்படுத்தல் மற்றும் பல்வேறு சிறுவர் போட்டிகள், அழகியற்கலை திறன்களை வளர்க்கும் நிகழ்ச்சித்திட்டங்கள், சேமிப்பு மற்றும் சமய நிகழ்ச்சித்திட்டங்கள், சிறுவர் நூலகங்களைத் தாபித்து குடியிருப்புக்களிலுள்ள பிள்ளைகளை ஒவ்வொரு துறையிலும் அபிவிருத்தி செய்யும் பொருட்டு இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன.

2015 ஆம் ஆண்டில் நகரக் குடியிருப்புக்களின் சிறுவர்களுக்காக தாபிக்கப்பட்ட சிறுவர் கழகங்களின் எண்ணிக்கை 15 ஆகும். மேற்படி சிறுவர் கழகங்கள் ஊடாக சுயசக்தி சிறுவர் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக 04 நகர வலயங்களையும் உள்ளடக்கும் வகையில் சிறுவர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களில் 20,000 பிள்ளைகள் சம்பந்தப்படுத்திக் கொள்ளப்பட்டனர்.





## 6.2 சிறுவர் கழகங்களைத் தாபித்தல் - ஹம்பாந்தோட்டை மாவட்டம்

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் யாவருக்கும் புகலிடம் வீடமைப்புக் கருத்திட்டத்தின் கீழ் சங்கிந்தகம மற்றும் செத்சந்தகம வீடமைப்புக் கருத்திட்டங்களைச் சேர்ந்த சிறுவர்களை ஒன்றிணைத்து சமூகத் திரட்டல் பிரிவின் அலுவலர்களின் தலையீட்டுடன் சிறுவர் கழகங்கள் தாபிக்கப்பட்டன.





## 6.3 சிறுவர் கழகங்களைத் தாபித்தல் - திருகோணமலை மாவட்டம்

சமூகத் திரட்டல் பிரிவின் அலுவலர்களின் தலையீட்டுடன் திருகோணமலை – சமுத்திரகம குடியிருப்பிலுள்ள சிறுவர்களை ஒன்றிணைத்து **மல்கெக்குளு** என்ற பெயரில் சிறுவர் கழகமொன்று தாபிக்கப்பட்டது. இதில் 30 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் கலந்துகொண்டார்கள். இதன் போது சிறுவர்களின் கவனத்தைப் பெற்றுக் கொள்வதற்காக பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.





### 6.4 சிறுவர் கழகங்களை இற்றைப்படுத்தல் - அநுராதபுரம் மாவட்டம்

அநுராதபுரம் - துறுஇத்துறுகம வீடமைப்புக் கருத்திட்டத்தில் 2015 ஆம் ஆண்டு தொடர்பில் சிறுவர் கழகத்தை இற்றைப்படுத்துவதானது சமூகத் திரட்டல் பிரிவின் அலுவலர்களின் தலையீட்டுடன் மேற்கொள்ளப்பட்டது. சிறுவர்களை ஒன்றுதிரட்டி அவர்களின் விளையாட்டு ஆற்றல்களை மேம்படுத்தவதற்காக மற்றும் அவர்களின் மனப்பாங்கினை விருத்தி செய்வதற்கான பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.





### 6.5 புதிய உலகினை வென்றிட வழிகாட்டும் ஆங்கிலக் கல்வி நிகழ்ச்சித்திட்டம்

சர்வதேச மொழியினால் உலகை வென்றிட புதிய வழிகளை உருவாக்கும் உலகில் அவ்வழிகளில் பயணிக்கும் ஆற்றலைக் கொண்டவர்களை உருவாக்கும் பொருட்டு கொழும்பு நகரில் குறைந்த வசதிகளைக் கொண்ட குடும்பங்களிலுள்ள பிள்ளைகளின் கல்வி அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு ஆங்கில மொழி அற்கை மேம்படுத்துவதற்காக பிரிடி' கவுன்சில் நிறுவனத்துடன் இணைந்து 20-15 வயதுக்கு இடைப்பட்டவர்களை இலக்காகக் கொண்டு 50 சிறுவர்களைக் கொண்ட குழுவுக்கு அவர்களிடம் பணம் அறவிடாது 10 வாரகால ஆங்கிலப் பாடநெறியைக் கற்க வாய்ப்பளிக்கப்படுகின்றது.

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அலுவலா்கள் மற்றும் பிரிடி' கவுன்சில் நிறுவனத்தின் அலுவலா்களின் பங்கேட்புடன் 04 நகர வலயங்களையும் உள்ளடக்கும் வகையில் வெளிக்களப் பரிசோதனை நடாத்தப்பட்டது. விண்ணப்பதாரா்களுக்கான நோ்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு மற்றும் கல்வித் தகைமைகள், ஆங்கில பேச்சு, வாசிப்பு ஆற்றல்களை கவனத்தில் கொண்ட பின்னா் பாடநெறிக்கு தெரிவுசெய்யப்பட்டனா்.





### 6.6 நகரக் குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களை மையமாகக் கொண்டு சுயசக்தி சமுதாய வள நிலையங்களைத் தாபித்தல்

கொழும்பு நகரில் வாழும் குறைந்த வசதிகளைக் கொண்ட சமுதாயத்தின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன், நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தினால் பொறுப்பளிக்கப்பட்டுள்ள கடமைகளில் நகரக் குடியிருப்புத் துறையின் பௌதீக அபிவிருத்தி மற்றும் மேற்படி குடும்பங்களின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார மேம்படுத்தலுக்கான பொறுப்பும் சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக அமுல்படுத்தப்பட்டுள்ளது.

அறிவையும், ஆற்றல்களையும் மேம்படுத்துவதற்காக ஒருசில குடியிருப்புக்களை இணைத்துக் கொண்டு பொது இடங்களில் 22 வள நிலையங்களைத் தாபிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது (இனங்காணப்பட்ட பொது இடங்களாக பெரும்பாலும் விஹாரைகள், சமுதாய மண்டபங்கள் உள்ளன) மேற்படி இடங்களுக்குப் பொறுப்பானவா்களின் இணக்கத்துடன் சமுதாய நிலையங்களைத் தாபிக்க நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டுள்ளது.

மேற்படி நிலையத்தின் செயற்பாடு மற்றும் பராமரிப்புக்கு மேற்படி நிலையத்திற்குப் பொறுப்பான அதிகாரியின் பங்கேட்புடன் செயற்குழுவொன்றும் தாபிக்கப்பட்டுள்ளது. மேற்படி குழுவின் ஊடாக குறித்த நிலையம் தொடா்பான சகல தீா்மானங்களுடன் மேற்கொள்ளப்படுவதுடன், அக்குழுவில் எமது அதிகார சபையின் குறித்த நிலையத்திற்குப் பொறுப்பான அலுவலரும் இணைந்து செயற்படுவாா்.

 

**உலகக் குடியிருப்புத் தினம் - 2015**

ஐக்கிய நாடுகளின் மனிதக் குடியிருப்பு அமைப்பின் முன்னெடுப்புடன் உலகம் முழுவதிலும் சகல நாடுகளிலும் ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதம் முதலாவது திங்கட்கிழமை உலகக் குடியிருப்புத் தினமாகக் கொண்டாடப்படுகின்றது. இம்முறை அக்டோபர் மாதம் 05 ஆம் திகதி உலகக் குடியிருப்புத் தினம் கொண்டாடப்பட்டது.

1985 ஆம் ஆண்டு ஜமெய்காவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் மனிதக் குடியிருப்பு ஆணைக்குழுவின் (ஹபிடாட்) கூட்டத்தொடரின் போது இலங்கை சமர்ப்பித்த பிரேரணையின் பெறுபேறாக 1986 ஆம் ஆண்டு முதல் இந்த சர்வதேச தினம் கொண்டாடப்படுகின்றது. இம்முறை 30 ஆவது ஆண்டாக இத்தினம் கொண்டாடப்பட்டது.

உலகக் குடியிருப்பு தினம் மற்றும் இந்த ஆண்டு முதல் யூன் மாதம் 23 ஆம் திகதியன்று பிரகடனம் செய்யப்பட்டுள்ள தேசிய வீடமைப்பு தினத்தைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் பொறுப்பு இலங்கையில் வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சின் கீழ் பொறுப்பளிக்கப்பட்டுள்ளதுடன், இந்த அமைச்சின் கீழ் இயங்கி வருகின்ற பிரதான நிறுவனமொன்றான நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை கடந்த ஆண்டுகளைப் போன்று இமம்முறையும் நகரக் குடியிருப்புக்களைத் தொடர்புபடுத்திக் கொண்டு அமுல்படுத்தியுள்ள சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை முன்னிட்டு விசேடமான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துகின்றது. குறிப்பாக சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள், யுவதிகளைத் தொடர்புபடுத்திக் கொண்டு நாடகப் போட்டி, கிரிக்கட் போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் சித்திரப் போட்டிகளும் இவ்வாறு நடாத்தப்படுகின்றன.

**2015 ஆம் ஆண்டின் தொணிப்பொருள் - யாவருக்கும் திறந்தவெளி "ரடிடைஉ ளியஉந கழச**



## 6.7 சுயசக்தி மேடையில் அரங்கேற்றப்பட்ட சிறுவர் நாடக விழா



## 6.8 சுயசக்தி சிறுவர் சித்திர ஆக்கப் போட்டி - 2015

நாளைய தினத்தில் வெற்றிபெற முயற்சிக்கின்ற சிறுவர்களின் உலகம் மனங்கவர் கலைப் படைப்பைப் போன்றது. அவ்வாறான சிறுவர் உலகம் சித்திர ஆக்கமாக வெளிவரும் போது அது மென்மேலும் மனங்கவர் ஆக்கமாக இருக்கும். இவ்வாறான கலை ஆக்கங்கள் எம் கண்ணுக்கு எதிரே சித்திரமாக வெளிவந்தது நகர்ப்புறக் குடியிருப்புக்களில் வாழும் பிள்ளைகளின் ஆற்றல்களின் மூலமாகும்.
2015 உலக குடியிருப்புத் தினத்தை முன்னிட்டு இம்முறையும் ஐந்தாவது தடவையாக நகர்ப்புற பிள்ளைகளின் கலை அம்சங்களை வெளிக்கொண்டுவருதல் மற்றும் அதன் முன்னேற்றத்திற்காக நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் சமூகத் திரட்டல் பிரிவின் தலையீட்டுடன் வெகுவிமரிசையாக சித்திரப் போட்டி நடாத்தப்பட்டது.
18-15, 14-10, 9-6 ஆகிய வயதுப் பிரிவுகளின் கீழ் தலைப்புக்களைக் கொண்டதாக இம்முறை சிறுவர் சித்திர ஆக்கப்போட்டிகள் 03 கட்டங்களின் கீழ் நடாத்தப்பட்டன. இதன் முதல் கட்டத்தின் போது சிறுவர்களின் ஆற்றல்களின் அடிப்படையில் 9000 சித்திரங்கள் உருவாக்கப்பட்டன. அன்றைய தினத்திலேயே நடுவர் குழுவின் தீர்ப்புக்கு அமைய விசேட திறமைகளைக் கொண்ட 200 சித்திர

ஆக்கங்கள், 400 திறமைகளைக் கொண்ட சித்திர ஆக்கங்கள் என்ற வகையில் 600 ஆக்கங்கள் இறுதி சித்திரக் கண்காட்சிக்காகத் தெரிவு செய்யப்பட்டன.











### 6.9 சிறுவர் சித்திரப் போட்டியின் சித்திரக் கண்காட்சி

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் கௌரவ சஜித் பிரேமதாச உள்ளிட்ட பிரமுகர்களின் பங்கேட்புடன் உலக குடியிருப்புத் தினக் கொண்டாட்ட வைபவத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட சித்திர ஆக்கப் போட்டியின் ஆக்கங்களைக் கொண்ட கண்காட்சி மாளிகாவத்தை பிரதீபா மண்டபத்தில் வெகுவிமரிசையாக நடாத்தப்பட்டது.





### 6.10 சுயசக்தி ஆக்கபூர்மான சிந்தனைக்கு வழிவகுக்கின்ற பாடசாலை கட்டுரைப் போட்டி

உலக குடியிருப்புத் தினத்தை முன்னிட்டு நடாத்தப்படுகின்ற பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான கட்டுரைப் போட்டி குடியிருப்புக்களை மையமாகக் கொண்டுள்ள பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்பட்டது. 03 வயதுத் தொகுதிகளின் கீழ் இந்த கட்டுரைப் போட்டி நடாத்தப்பட்டதுடன், கல்விமான்களைக் கொண்ட நடுவர் குழு வெற்றியீட்டியவர்களைத் தெரிவு செய்தது.

## 7.0 ஆரோக்கியமிக்க மக்கள் சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காக சமுதாய மருத்துவ சாய்சாலை நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்

### 7.1 இனப்பெருக்க சுகாதார சாய்சாலை நிகழ்ச்சித்திட்டம்

குறைந்த வசதிகளைக் கொண்ட நகர்ப்புற வலயங்களில் வாழும் வறிய குடும்பங்களில் வசிக்கின்ற சிறுவர்கள் மற்றும் முதியவர்களான சமுதாயத்தின் சுகாதார நிலைமையை மேம்படுத்தும் நோக்கத்துடன், மருத்துவ சாய்சாலை நிகழ்ச்சித்திட்டத் தொடதொன்று நடாத்தப்பட்டது. இதன் போது விசேடமாக குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களில் வசிக்கின்ற மக்களை இலக்காகக் கொண்டு இலங்கை குடும்பத் திட்டமிடல் சங்கத்தின் முழு அனுசரணையுடன் இனப்பெருக்க சுகாதாரம் பற்றி விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் 04 வலயங்களையும் உள்ளடக்கும் வகையில் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டன.

 

7.2 பல் மருத்துவ சாய்சாலை நிகழ்ச்சித்திட்டம்

04 நகர வலயங்களிலும் வசிக்கின்ற பிள்ளைகளின் வாய்ச் சுகாதாரத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் மஹரகம பல் மருத்துவ நிறுவனத்தின் முழு அனுசரணையின் கீழ் நடாத்தப்பட்ட விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டமும், சிகிச்சையளிக்கும் சாய்சாலையும் நவகம்புர சமுதாய மண்டபத்தில் இடம்பெற்றது.

 

7.3 ஆயுர்வேத மருத்து சாய்சாலை

சமுதாய சகாதாரத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் மேல் மாகாண ஆயுர்வேத ஆணையாளர் அலுவலகத்தின் முழு அனுசரணையின் கீழ் பொரளை மெகசின் வீதி, லெஸ்லி ரணகல சமுதாய மண்டபத்தில் மாவட்ட மருத்துவ முகாமையாளரின் தலைமையில் ஆயுர்வேத சிகிச்சை சாய்சாலையொன்று நடாத்தப்பட்டது. இதன் போது சாய்சாலையில் சிகிச்சை பெற்ற நோயாளர்களுக்கு இலவசமாக மருந்துகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

**7.4** இரத்த தானம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தல்

சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்து அமுல்படுத்தப்படுகின்ற ஸ்ரேஸ்புரம் சுயசக்தி மனித அபிவிருத்தி சமுதாய சங்கள் மற்றும் ஸ்ரேஸ்புர சமாதி இளைஞர் கழகம் ஆகியன இரண்டாவது தடவையாக ஒழுங்குசெய்திருந்த இரத்ததானம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் கிரேண்டபாஸ் சிரிமாபுர பிரதீபா மண்டபத்தில் நடாத்தப்பட்டது. இதில் 100 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.





8.0 **இனப்பெருக்க சுகாதார சாய்சாலை நிகழ்ச்சித்திட்டம்**

கொழும்பு வடக்கு, கொழும்பு மத்தி, பொரளை மற்றும் கிழக்கு / மேற்குக் கொழும்பு வலங்களை உள்ளடக்கும் வகையில் குறைந்த வசதிகளைக் கொண்ட நகரக் குடியிருப்புக்களில் வாழும் சமுதாயத்தின் பங்கேட்புடன் கொழும்பு மாநகர சபை மற்றும் சமுதாய பொலிஸ் அலகின் முழு அனுசரணையின் கீழ் குறிப்பாக நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் சமூகத் திரட்டல் பிரிவின் பூரண ஒருங்கிணைப்புடன் நடாத்தப்பட்ட இந்த சிரமதான நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் குடியிருப்புக்களில் காணப்பட்ட கழிவுப்பொருட்களை அகற்றல், மலசல கழிவகற்றல் மற்றும் டெங்கு நோய் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வீடு வீடாகச் சென்று சமுதாயத்தை விழிப்புணர்வூட்டல் மற்றும் நுளம்புகளின் தொல்லையை ஒழிப்பதற்காக புகைஅடித்தல் மற்றும் எண்ணெய் தெளித்தல் கொழும்பு மாநகர சபையின் சமுதாய சுகாதார பிரிவின் அலுவலர்களின் பூரண ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டது.





## 9.0 ஆன்மீக மற்றும் உளவியல் ஆரோக்கியம்மிக்க சமுதாயம்..........

### 9.1 சமய நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது ஆன்மீக மற்றும் பௌதீக துறைகளில் பூரணத்துவமிக்க சமுதாயத்தினரை சமூகத்தில் உருவாக்குவதற்காகும்.

அங்குலான கடலரிப்புக்கு ஆளாகின்ற மீனவர் சமுதாயத்தின் எதிர்கால நலன்புரியை அடிப்படையாகக் கொண்டு அங்குலான சயுரபுர தொடர்மாடி வீடமைப்புத் திட்டம் நிர்மாணிக்கப்பட்டு அதில் குடியமர்த்தப்பட்டார்கள். இதனை அடுத்து அவர்களின் ஆன்மீக மற்றும் உளவியல் ஆரோக்கியத்தை நோக்காகக் கொண்டு மேற்படி வீடமைப்புத் திட்டத்தில் பிரித் ஓதும் வைபவம் மற்றும் தானம் வழங்கும் நிகழ்வுகள் சகல வீட்டு உரிமையாளர்களினதும் பங்களிப்புடன் நடாத்தப்பட்டது.





## 10.0 கலாசார நிகழ்ச்சித்திட்டங்கள்

### 10.1 புத்தாண்டு வைபவம்

மொரட்டுவை அங்குலான சயுரபுர தொடர்மாடி வீடமைப்புத் திட்டத்தின் சமுதாயத்தினர் மற்றும் சிறுவர் சங்கம் ஒன்றிணைந்து முதல் தடவையாக நடாத்திய புத்தாண்டு வைபவம் மிகவும் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. இதற்கு நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் சமூகத் திரட்டல் பிரிவின் அலுவலர்களின் வழிகாட்டலும் வழங்கப்பட்டது.






## 11.0 சமுதாய பங்கேட்பு பௌதீக கருத்திட்டங்களை அமுல்படுத்தல்

### 11.1 அநுராதபுரம் சமுதாய மண்டபத்தை நிர்மாணித்தல்

302 கட்டுகலியாவ கிராமச் சங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொண்டுள்ள துறுஇத்துருகம வீடமைப்புக் கருத்திட்டத்தின் சுயசக்தி மனித அபிவிருத்திச் சங்கம் மற்றும் அதன் அங்கத்தவர்களின் ஊழியம் மற்றும் செயல்ரீதியான சமுதாயப் பங்களிப்பை வழங்கி திட்டத்திற்கு அமைய சமுதாய மண்டபத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதற்கு திவிநெகும திணைக்களம் மூலம் நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டன.





# நகரக் குடியிருப்பு அதிகார சபையின்
# 2015.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான
# நிதிக் கூற்றுக்கள்

1. நிதி நிலைமைக் கூற்று
2. வருமான, செலவினக் கணக்கு
3. காசுப் பாய்ச்சல் கூற்று
4. உரிமையாண்மை மாற்றம் பற்றிய கூற்று

## நகர குடியிரப்பு அபிவிருத்தி அதிகார சபையின்
## 2014 டிசெம்பர் 31 ஆந் திகதிக்கு
## நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | 2015 | 2014 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| காசும் வங்கி மீதியும் | 01 | 146,767,755.40 | 81,041,114.83 |
| இருப்பு வள நிலையங்களுக்கு | 02 | 1,390,086.50 | 11,441,401.85 |
| முற்பணம் | 03 | 331,943.30 | 290,404.00 |
| ஊழியர் வீடமைப்புக் கடன் | | 21,715,103.42 | |
| இடர் கடன் | | 9,964,875.29 | 7,466,185.85 |
| நலன்புரிக் கடன் | | 10,000.00 | 10,000.00 |
| ரீல் கம்பனி | | | 12,100,000.00 |
| கிடைக்க வேண்டிவை | 04 | 26,026,594.03 | 16,741,364.25 |
| கிடைக்க வேண்டிவை 1மு ஆன சேவைக் கட்டணம் - (நகர அபிவிருத்தி அதிகார சபை) | | 207,331,767.00 | |
| 2016 ஆம் ஆண்டுக்கு – கிடைக்க வேண்டிய தவணை – விசிறி வீடமைப்புக் கடன் கருத்திட்டம் | | 11,036,104.00 | |
| ஒப்பந்த முற்பணம் | 05 | 225,297,470.86 | 170,562,116.84 |
| | | **649,871,699.80** | **299,652,587.62** |
| **நடைமுறையல்லா சொத்துக்கள்** | | | |
| வீடமைப்புக் கடன் | 06 | 121,965,368.76 | 124,192,218.57 |
| பூர்த்தி செய்யப்படாத கருத்திட்டங்கள் | 07 | 643,847,680.46 | 1,775,592,625.62 |
| ஆதனம், பொறியும், உபகரணமும் | 08 | 7,898,473.09 | 12,970,151.34 |
| அங்குலான வீடமைப்புக் கருத்திட்டம் | | 478,988,658.00 | |
| சிலாபம் வீடமைப்புக் கருத்திட்டம் | | 52,177,656.10 | |
| 48 ஆம் தோட்ட வீடமைப்புக் கருத்திட்டம் (14 வீடுகள்) | | 34,500,000.00 | 34,500,000.00 |
| துருஇதுருகம வீடமைப்புக் கருத்திட்டம் (8 வீடுகள்) | | 6,328,507.81 | 6,328,507.81 |
| | | **1,345,706,344.22** | **1,953,583,503.34** |
| **மொத்த சொத்துக்கள்** | | **1,995,578,044.02** | **2,253,236,090.95** |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறைப் பொறுப்பு** | | | |
| நின்ற செலவினம் | 09 | 23,628,810.53 | 242,944,312.78 |
| முகாமைத்துவக் கூட்டுத்தாபன நிதி | | 11,105,000.00 | 7,830,000.00 |
| தடுத்து வைக்கப்பட்ட நிதி | 10 | 51,672,834.75 | 44,179,170.33 |
| வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை | 11 | 1,192,275.15 | 2,959,364.16 |
| முற்பணமாக பெற்ற தவணைப்பணம் - விசிறி வீடமைப்புக் கடன் கருத்திட்டம் | | 167,530.00 | |

| | | | |
|---|---|---|---|
| முற்பணமாக பெற்ற தவணைப்பணம் – சிங்கபுர வாடகை வீடு | | 90,000.00 | |
| அங்குலான வாடகை முற்பணம் | | | 8,250,000.00 |
| | | **87,856,450.43** | **306,162,847.27** |
| **<u>நடைமுறையல்லா பொறுப்பு</u>** | | | |
| பணிக்கொடைக்கான ஒதுக்கம் | | 9,714,817.25 | 5,738,637.50 |
| | | **9,714,817.25** | **5,738,637.50** |
| மொத்த பொறுப்புக்கள் | | **97,571,267.68** | **311,901,484.77** |
| தேறிய சொத்துக்கள் | | **1,898,006,776.34** | **1,941,334,606.19** |
| — | | | |
| உரிமையாண்மையும், சேர்மமும் | | | |
| திறைசேரிக் கொடை | **12** | 1,627,739,363.69 | 1,878,411,960.70 |
| வருமான சேர்மம் | | 93,094,358.50 | 93,094,358.50 |
| | | **1,720,833,722.19** | 1,971,506,319.20 |
| திரண்ட நிதி | | (30,171,713.01) | (19,887,113.92) |
| ஆண்டுக்கான மிகை ∴ குறை | | 207,344,767.16 | (10,284,599.09) |
| | | **177,173,054.15** | **(30,171,713.01)** |
| மொத்த உரிமையாண்மை | | **1,898,006,776.34** | **1,941,334,606.19** |

பக்க இலக்கம் 03 - 05 இல் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் பக்க இலக்கம் 10 முதல் 14 வரையான குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களின் முக்கிய அம்சமொன்றாகும். இறுதி நிதிக்கூற்றுக்களை தயார்செய்தல் மற்றும் சமர்ப்பிப்பது நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைத்துவக் குழுவின் பொறுப்பாகும். இந்த நிதிக் கூற்றுக்களுக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன், அவர்கள் சார்பாக கீழே கைஒப்பமிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| …………………… | …………………… | ………………….. |
| பணிப்பாளர் (நிதி) | பணிப்பாளர் நாயகம் | தவிசாளர் |
| நகர குடியிருப்பு அபிவிருத்தி | நகர குடியிருப்பு அபிவிருத்தி | நகர குடியிருப்பு அபிவிருத்தி |
| அதிகாரசபை | அதிகாரசபை | அதிகாரசபை |

**நகர குடியிரப்பு அபிவிருத்தி அதிகார சபையின்**

2015 டிசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான

வருமான, செலவினக் கணக்கு

| | குறிப்பு | 2015 | 2014 |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| வீடமைப்பு அமைச்சு | | 41,651,140.00 | 49,136,399.70 |
| திறைசேரிக் கொடை | | 73,730,000.00 | 67,000,000.00 |
| வட்டி வருமானம் | 13 | 7,827,568.80 | 8,287,240.82 |
| காணி மீட்டு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் | | 3,891,911.75 | |
| 1மூ சேவைக் கட்டண வருமானம் | | 207,331,767.00 | |
| வேறு வருமானங்கள் | 14 | 1,205,955.00 | 1,677,350.82 |
| மொத்த வருமானம் | | **335,638,342.55** | **126,100,991.34** |
| **செலவினம்** | | | |
| நிர்வாகச் செலவினம் | | | |
| சம்பளம் | | 50,109,723.94 | 33,652,379.26 |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | | 2,234,551.28 | 2,749,329.60 |
| வேறு கொடுப்பனவு | | 1,039,201.00 | 2,889,803.52 |
| மிகை ஊதியம் | | 1,785,000.00 | 1,335,000.00 |
| பணிப்பாளர் சபைக் கொடுப்பனவு | | 789,652.00 | 897,460.00 |
| பிரயாணச் செலவினம் | | 490,730.81 | 629,771.00 |
| வெளிநாட்டுப் பிரயாணச் செலவினம் | | | 2,211,339.47 |
| எழுதுகருவிகள் | | 1,102,858.58 | 2,310,209.87 |
| எரிபொருள் | | 1,848,772.53 | 2,290,876.10 |
| நலன்புரிச் செலவினம் | | 733,604.00 | 629,909.00 |
| பத்திரிகை | | 29,740.00 | 35,125.00 |
| முத்திரை | | 138,925.00 | 80,305.00 |
| வங்கிச் செலவினம் | | 5,550.00 | 15,000.00 |
| தொலைபேசிச் செலவினம் | | 1,231,267.90 | 1,441,799.26 |
| அலுவலக வாடகைச் செலவினம் | | 10,294,302.32 | 6,914,421.64 |
| புதுப்பித்தலும், பராமரிப்பும் (அலுவலக உபகரணம்) | | | |

| | | | |
|---|---|---|---|
| | | 564,053.49 | 471,299.21 |
| வாகனம் புதுப்பித்தலும், பராமரிப்பும் | | 3,590,993.34 | 2,087,204.23 |
| கட்டிடம் புதுப்பித்தலும், பராமரிப்பும் | | 6,996.00 | 352,476.50 |
| கட்டிடம் புனரமைப்பு | | 171,453.71 | 3,451,546.86 |
| காப்புறுதிச் செலவினம் | | 430,566.08 | 471,781.70 |
| சுத்தம் செய்தல் | | 677,626.49 | 376,875.00 |
| பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான செலவினம் | | 315,235.68 | 493,850.00 |
| அச்சுச் செலவினம் | | 96,430.00 | 1,018,633.90 |
| நுகர்வுப் பொருட்கள் கொள்வனவு | | 15,670.00 | 38,167.00 |
| விளம்பரம் | | | 244,093.00 |
| வேறு செலவினங்கள் - பொருட்கள் | | 30,575.00 | 26,924.00 |
| வேறு செலவினங்கள் - சேவைகள் | | 42,506.84 | 135,558.72 |
| கணக்காய்வுக் கட்டணம் | | 139,860.00 | 115,320.00 |
| ஊ.சே.நிதியம் | | 8,131,190.90 | 8,922,837.38 |
| ஊ.நம். நிதியம் | | 1,219,678.62 | 1,337,258.87 |
| பாதுகாப்புச் செலவினம் | | 324,000.00 | 289,000.00 |
| பணிக்கொடை | | 4,691,429.75 | 1,499,716.87 |
| மின்சாரச் செலவினம் | | 18,470.31 | 136,298.26 |
| நீர்ப் பட்டியல் | | 24,404.25 | 181,484.06 |
| உபசரணைச் செலவினம் | | | 8,710.00 |
| மருத்துவச் செலவினம் | | 18,000.00 | 2,500.00 |
| தேசத்திற்கு மகுடம் | | | 208,800.00 |
| விசிறி வீடமைப்புக் கடன் தவணையை சேகரிப்பதற்கான | | | 143,690.70 |
| தரகு | | 823,533.73 | |
| அறவிட முடியாக் கடன் | | 8,816.44 | |
| ரீல் கம்பனி | | 2,047,958.78 | |
| போக்குவரத்துச் செலவினம் | | 1,071,155.89 | 5,404,151.55 |
| ஜயக் கடன் - விசிறி வீடமைப்புக் கடன் தேய்மானம் | 08 | 921,937.00 | |

| | | | |
|---|---|---|---|
| | | 2,693,375.25 | 2,389,984.05 |
| **அபிவிருத்திச் செலவினம்** | | **99,909,796.91** | **87,890,890.58** |
| சிங்ஹபுர வீடமைப்புக் கருத்திட்டம் | | | 3,617,773.33 |
| சுயசக்தி சமுதாய சங்கங்களை நிர்மாணித்தல் | | 94,524.68 | 5,174,563.71 |
| சஹஸ்புர வீடமைப்புத்திட்டத்தின் புனரமைப்பு | | | 343,750.00 |
| குடியிருப்புத் தினம் நிகழ்ச்சித்திட்டம் | | 6,070,558.24 | 24,074,474.18 |
| உற்சவ செலவினம் | | | 14,000.00 |
| சுயசக்தி மனித அபிவிருத்தி | | 8,244,530.85 | 15,261,553.63 |
| ஹம்பாந்தோட்டை துப்பரவேற்பாட்டுக் கருத்திட்டம் | | 7,275,996.00 | |
| வள நிலையங்களை நிர்மாணித்தல் | | 1,055,381.70 | |
| அங்குலான கருத்திட்டத்தை பராமரிப்புச் செய்தல் | | 1,972,786.30 | |
| ஹம்பாந்தோட்டை வீடமைப்புக் கருத்திட்டம் | | 382,402.76 | |
| சீதாவக்கபுர பூர்த்தி செய்யப்படாத கருத்திட்டத்தின் நிலுவை | | 2,395,289.96 | |
| திருகோணமலை பூர்த்தி செய்யப்படாத கருத்திட்டத்தின் நிலுவை | | 747,754.49 | |
| லுனாவ – விலைக் குழுக் கட்டணம் | | 144,553.50 | |
| அநுராதபுரம் வீடமைப்புக் கருத்திட்டம் | | | 8,585.00 |
| | | **28,383,778.48** | **48,494,699.85** |
| **மொத்த செலவினம்** | | **128,293,575.39** | **136,385,590.43** |
| **காலப்பகுதிக்கான மிகை ∴ (குறை)** | | **207,344,767.16** | **(10,284,599.09)** |

**நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின்**

**2015 டிசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான**

**காசுப் பாய்ச்சல் கூற்று**

| | 2015 | 2014 |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகள்** | | |
| **பெறுகைகள்** | | |
| திறைசேரியின் கொடை (மீண்டெழும்) | 73,730,000.00 | 67,000,000.00 |
| வேறு வருமானம் | 420,955.00 | 951,470.00 |
| வட்டி வருமானம் | 1,714,869.57 | 2,219,950.61 |
| இடர் கடன் அறவீடு | 2,504,602.09 | 798,580.96 |
| அங்குலான தவணைப்பணம் | 452,800.00 | |
| பதவியணி வீடமைப்புக் கடன் தவணைப்பணம் | 2,317,987.05 | |
| குத்தகை வாடகை | 712,000.00 | 315,000.00 |
| கேள்விக் கட்டணம் | | |
| | 81,853,213.71 | 71,285,001.57 |
| **கொடுப்பனவு** | | |
| சம்பளமும் வேதனமும் | 70,460,051.83 | 52,666,392.31 |
| பிரயாணச் செலவினம் | 473,224.31 | 2,808,721.97 |
| சேவை செலவினம் | 3,113,622.91 | 4,923,098.65 |
| ஒப்பந்த சேவைகளுக்கான கொடுப்பனவு | 15,041,958.42 | 19,816,337.97 |
| பராமரிப்புச் செலவினம் | 4,591,453.91 | 7,042,858.38 |
| கடன் சேகரிக்கும் தரகு | 814,703.73 | |
| காசு முற்பணம் | 41,539.30 | 67,839.00 |
| | 94,536,554.41 | 87,325,248.28 |
| | | |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | **(12,683,340.70)** | **(16,040,246.71)** |
| **முதலீட்டு நடவடிக்கைகள்** | | |
| **பெறுமைககள்** | | |
| வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை -சகஸ்புர புனரமைப்பு | 7,121,750.17 | 31,141,388.49 |
| விசிறி வீடமைப்பு கடன் தவணை பெறுகை | 8,394,227.06 | 3,833,684.86 |
| கிடைத்த நிதி – ரீல் | 10,414,448.72 | 1,003,674.00 |
| அங்குலான கருத்திட்டத்திற்கு நிதி பெறுகை | | |
| அநுராதபுரம் கட்டுகலியாவ வீடமைப்புக் கடன் தவணைப்பணம் | | 246,000.00 |
| சுயசக்தி கடன் தவணை | 191,413.86 | 232,710.32 |

| | | |
|---|---|---|
| | 26,121,839.81 | 36,457,457.67 |
| **கொடுப்பனவுகள்** | | |
| அங்குலான வீடமைப்புக் கருத்திட்டம் | 158,920,614.77 | 241,357,521.01 |
| லுனாவ வீடமைப்புக் கருத்திட்டம் | 193,101,097.71 | 197,901,493.05 |
| தலவாக்கலை வீடமைப்புக் கருத்திட்டம் | 7,133,609.12 | 40,957,707.24 |
| சிலாபம் வீடமைப்புக் கருத்திட்டம் | 761,819.88 | 47,510,561.35 |
| சீதாவக்கபுர கருத்திட்டம் | 880,607.46 | 1,514,682.50 |
| ஹம்பாந்தோட்டை கருத்திட்டம் | 7,475,273.76 | |
| திருகோணமலை கருத்திட்டம் | 9,400.00 | 738,354.49 |
| அநுராதபுரம் வீடமைப்புக் கருத்திட்டம் | - | - |
| சகஸ்புர புனரமைப்பு | 8,888,839.18 | 28,525,774.33 |
| நிலையான சொத்து கொள்வனவு | 2,295,163.20 | 4,176,057.60 |
| மனித அபிவிருத்திச் செலவினம் | 15,387,413.42 | 47,584,974.09 |
| 48ஆம் தோட்டம் | | 4,520,948.75 |
| பதவியணி வீடமைப்புக் கடன் | 23,400,000.00 | |
| விசிறி வீடமைப்புக் கடன் | 12,500,000.00 | 21,425,000.00 |
| | 430,753,838.50 | 636,213,074.41 |
| | | |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசோட்டம்** | **(404,631,998.69)** | **(599,755,616.74)** |
| **நிதி நடவடிக்கைகள்** | | |
| திறைசேரியின் கொடை (முலதன செலவினம்) | 479,766,979.96 | 596,664,061.18 |
| அங்குலான முகாமைத்துவக் கூட்டுத்தாபன நிதி | 3,275,000.00 | 6,180,000.00 |
| **நிதிசார் நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசோட்டம்** | **483,041,979.96** | **602,844,061.18** |
| காசும் காசுக்கு சமமானவையினதும் தேறிய அதிகரிப்பு / (குறைவு) வித்தியாசம் | 65,726,640.57 | (12,951,802.27) |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானவையும் | 81,041,114.8 3 | 93,992,917.10 |
| **ஆண்டின் இறுதியில் காசும் காசுக்கு சமமானவையும்** | **146,767,755.40** | **81,041,114.83** |
| | | |

**2015.12.31 ஆம் திகதிக்கு காசேட்டு மீதி**

| | |
|---|---|
| இலங்கை வங்கி, பத்தரமுல்லை (மீண்டெழும்) | 2,758,430.41 |
| இலங்கை வங்கி, பத்தரமுல்லை (மூலதன) | 92,893,228.98 |
| இலங்கை வங்கி, பத்தரமுல்லை (அநுராதபுரம்) | 2,152,504.75 |
| இலங்கை வங்கி, பத்தரமுல்லை (நகரக் குடியிருப்பு மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம்) | 16,450.39 |
| சேமிப்புக் கணக்கு | 37,654,143.53 |
| சேமிப்புக் கணக்கு – முகாமைத்துவக் கூட்டுத்தாபன நிதி | 11,292,997.34 |
| | **146,767,755.40** |

## நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின்
## 2015 டிசெம்பர் 31ஆந் திகதிக்கான உரிமைமாற்றம் பற்றி கூற்று

| விபரம் | மூலதனம் | திரண்ட நிதியம் | | அரச கொடை | | தடுத்து வைக்கப்பட்ட தொகை | | வருமானத்திற்கு எதிராக பதிவழித்தல் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 |
| 2015.'.01.'.01 இல் மீதி | - | (30,171,713.01) | (19,887,113.92) | 1,878,411,960.70 | 1,315,464,107.72 | 93,094,358.50 | 4,605,240.63 | 0.00 | 199,332,113.44 | 1,941,334,606.19 | 1,499,514,347.87 |
| குறித்த ஆண்டில் பிரதான பெறுகைகள் | | | | 464,706,000.00 | 562,947,852.98 | | | | | 464,706,000.00 | 562,947,852.98 |
| வருமான சேர்மம் | | | | | | | 93,094,358.50 | | | | 93,094,358.50 |
| காலப்பகுதிக்கான மிகை/(குறை) | | 207,344,767.16 | (10,284,599.09) | (688,771,986.58) | | | 1,133,396.87 | | | (481,427,219.42) | (9,151,202.22) |
| ஆண்டினுள் செலுத்தல் | | | | (26,606,610.43) | | | | 0.00 | 106,830,733.83 | (26,606,610.43) | 106,830,733.83 |
| **2015.'.12.'.31 இல் மீதி** | - | 177,173,054.15 | (30,171,713.01) | 1,627,739,363.69 | 1,878,411,960.70 | 93,094,358.50 | 98,832,996.00 | | 306,162,847.27 | 1,898,006,776.34 | 2,253,236,090.96 |

ஈஎச்யுடி.ி.சி.ி.யூஎஸ்டிஏ.ி.எவ்ஏ ி.15.ி.01

2016 டிசம்பர் 09 ஆம் திகதி

தவிசாளர்,
நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை.

**நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் 2015 திசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971இன் 38ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் 2015 திசெம்பர் 31ஆம் திகதிக்கான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றம் பற்றிய கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கங்களுடனான தகவல்களின் பொழிப்பைக் கொண்ட 2015 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு 1971இன் 38ஆம்இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13(1)ஆம் பிரிவு மற்றும் 2008 இன் 36 ஆம் இலக்க நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் 17(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1)ம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கை 2016 டிசம்பர் மாதம் 06 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

**1.2. நிதிக்கூற்றுக்கள் தொடர்பிலான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்கள், இலங்கை அரசதுறையின் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் மற்றும் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பாக அவசியமாகின்ற உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

## 1.3. கணக்காய்வின் பொறுப்பு

எனது கணக்காய்வுப் பரிசோதனைகளின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர்மட்ட கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமனங்களுக்கு (ஐளுளுயு 1 1000-1810) இசைவாக இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்புடையவாறு எனது கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. ஒழுக்கநெறிக் கோவைகளின் தேவைகளுக்கு ஏற்புடையதாக இருத்தல் மற்றும் நிதிக் கூற்றுக்கள் போதியளவில் தவறான கூற்றுக்கள் அற்றது என்பது பற்றி நியாயமான சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்காக கணக்காய்வு திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்படுகின்றதென இந்த நியமங்கள் எதிர்பார்க்கின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள வெளிப்படுத்தல்களையும் தொகைகளையும் ஆதரிக்கவல்ல சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்காக நடைமுறைகளை அமுல்படுத்துவதும் கணக்காய்வில் உள்ளடங்கும். தெரிவு செய்யப்பட்ட நடவடிக்கை முறைகள், மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்டக்கூடிய அளவைரீதியான தவறான கூற்றுக்களிலிருந்து அபாய மதிப்பீடு கணக்காய்வாளரின் தீர்மானத்தின் அடிப்படையில் அமைகின்றது. மேற்படி அபாயங்களை மதிப்பீடு செய்யும் போது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வதற்கு மற்றும் நியாயமான சமர்ப்பணம் மீது ஏற்புடையதாகின்ற உள்ளகக் கட்டுப்பாடு கணக்காய்வின் போது கவனத்தில் கொள்ளப்பட்ட போதிலும் அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டின் விளைதிறன் தொடர்பாக கருத்துக்களை வெளியிட உத்தேசிப்பதில்லை. முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை மற்றும் பயன்படுத்திக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மையை மதிப்பீடு செய்தல் மற்றும் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் தொடர்பிலான மதிப்பீடும் கணக்காய்வில் உள்ளடங்குகின்றன. 1971இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13ஆம் பிரிவின் (3) மற்றும் (4)ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நர்மாணிப்பதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிபு அதிகாரத்தை வழங்குகின்றன.

எனது கணக்காய்வு கருத்துக்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை என்பதும் அவை பொருத்தமானவை என்பதும் எனது நம்பிக்கையாகும்.

## 1.4. பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2. பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு சீராக்கல்கள் செய்யப்பட்டிருப்பின் தொடர்ச்சியான நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கும் பெரும்பாலான அடிப்படை அம்சங்களில் போதியளவில் தாக்கம் செலுத்தியிருந்திருக்க முடியும்.

# 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1. பாதகமான அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 2.2.ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக 2015 திசெம்பர் 31இல் உள்ளவாறான நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நிதிசார் நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிசார் செயற்பாடுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன இலங்கை அரச கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உண்மையாகவும், நியாயமான நிலைமையையும் வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1. நிறுவனம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

(அ) 2008 இன் 36 ஆம் இலக்க நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் 16(3) உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, அதிகார சபையின் ஆரம்ப மூலதனம் ரூபா மில்லியன் 5000 ஆக இருத்தல் வேண்டும் என்பதுடன், இது பகுதிபகுதியாக அரச திரண்ட நிதியத்திலிருந்து செலுத்தப்படல் வேண்டுமாயினும் மீளாய்வு ஆண்டு நிறைவடையும் வரை அதிகார சபைக்கு மூலதனம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2008 இன் 36 ஆம் இலக்க நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் 16(உ) உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, குறைந்த செலவின வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிதி வழங்கும் பொருட்டு ஆதன அபிவிருத்தியாளர்களிடமிருந்து சேவைக் கட்டணமாக நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை திரட்டுகின்ற சகல தொகைகளும் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார

சபையின் நிதியத்தில் செலவு வைக்கப்படல் வேண்டுமாயினும் 2010 டிசம்பர் 14 ஆம் திகதிய 10.∴.2951.∴.504.∴.012 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் இந்த சேவைக் கட்டணங்கள் அறவிடப்படுவது நிறுத்தப்பட்டிருந்தன் காரணமாக நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையானது தமது பிரதான வருமான வழியை இழந்திருந்தது. இதற்கமைய திறைசேரி அல்லது அரசாங்கத்தின் வேறு நிதிசார் நிவாரணங்கள் இன்றி அதிகார சபையை பேணிவருவதில் உறுதியற்ற நிலை காணப்படுகின்றது

### 2.2.2. கணக்கீட்டுக் கொள்கைகள்

திறைசேரியினால் மூலதனச் செலவினங்களுக்கு அதிகார சபைக்கு வருடாந்தம் வழங்கப்படுகின்ற அரச கொடை தொடர்பாக பின்பற்றப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3. கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) அங்குலான வீடமைப்புக் கருத்திட்டத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,179,062,714 செலவிடப்பட்டுள்ள போதிலும் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் திறைசேரிக் கொடையிலிருந்து ரூபா 684,298,437 பதிவழிப்புச் செய்யப்பட்டதனால் நடைமுறையல்லாச் சொத்துக்களின் அளவு அத்தொகையால் குறைவாக கணிப்பிடப்பட்டிருந்த,

ஆ) வங்கி நடமாடும் கணக்கொன்று தொடர்பான நேரடியான செலவுவைத்தல் ரூபா 1,199,250 ஆன தொகையை 12 மாதங்களாக இனங்கண்டு கணக்குகளில் பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இ) அங்குலான வீடமப்புக் கருத்திட்டத்திற்கு மேற்படி மேற்படி கருத்திட்டதிற்கு அண்மித்தாக உள்ள காணியில் 0.0508 ஹெக்ரயார் ரூபா 5,020,516 செலுத்தப்பட்டு அதிகார சபையினால் சுவீகரிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையான சொத்துக்கள் பற்றிய தகவல்கள் நடைமுறையல்லா சொத்துக்களில் காணிகளின் கீழ் தனியாக வெளிப்படுத்தப்படாது கருத்திடட்டத்தின் செலவினத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஈ) அதிகார சபையினால் நிருவகிக்கப்படுகின்ற கம்பனியொன்றிடமிருந்து அதிகார சபைக்கு மீளாய்வு ஆண்டில் பொறுப்பளிக்கப்பட்டிருந்த 04 மோட்டார் வாகனங்கள் மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதி வரை மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

உ) அதிகார சபையின் அலுவலகக் கட்டிடமொன்றை புதுப்பிப்பதற்காக இலங்கை காணி மீட்டு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 3,891,911 குறித்த நிறுவனத்தின் இணக்கப்பாடு இன்றி தீர்க்காது வருமானத்தில் செலவு வைக்கப்பட்டுள்ளது.

ஊ) ஆதன அபிவிருத்தியாளர்களின் சேவைக் கட்டணங்களாக அதிகார சபைக்குக் கிடைக்க வேண்டிய தொகை ரூபா 207,331,767 நகர அபிவிருத்தி அதிகார சபையினால் சேகரிப்பட்டிருந்தது. இந்தத் தொகை கடந்த ஆண்டுகளுக்கு ஏற்புடையதாக உள்ள போதிலும் முன்னைய ஆண்டுகளுக்கு ஏற்புடையவாறு சீராக்கல் செய்யாது மீளாய்வு ஆண்டின் வருமானமாக கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருந்து.

### 2.2.4 கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை

சுயசக்தி நிலையங்கள் 6 இற்கு வழங்கப்பட்ட ரூபா 1,675,608 பெறுமதிமிக்க கணினிகள் மற்றும் தளபாட உபகரங்கள் கையளிக்கப்பட்டதை உறுதி செய்வதற்கான பயன்படுத்திக் கொள்ளக்கூடிய ஆவணங்கள் கணக்காய்வுக்கு சமா்ப்பிக்கப்படவில்லை.

## 2.3 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

(அ) மீளாய்வு ஆண்டில் வழங்கப்பட்டிருந்த கூட்டுத்தொகையான ரூபா 200,091 ஆன முற்பணத்தைத் தீர்த்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ)விசிறி வீடமைப்பு கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் முதல் கட்டத்தின் கீழ் கிடைக்க வேண்டிய கடன் தவணையின் பெறுமதி ரூபா 16,851,730 ஆகும் என்பதுடன் இவற்றில் 1 வருடம் முதல் 2 வருடங்களுக்கு இடையிலான நிலுவை ரூபா 4,453,942 உம் 2 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை ரூபா 7,000,739 உம் ஆகும்.

(இ) மீளாய்வு ஆண்டுக்குக் கிடைக்க வேண்டிய அங்குலான வீடமைப்புக் கடன் தவணைப்பணம் ரூபா 7,525,619 ஆயினும், இதில் அறவிடப்பட்ட கடனின் பெறுமதி ரூபா 452,800 ஆயினும் அறவிடப்படாத கடன் தவணைப்பணமானது, மொத்த கடன் தவணைப் பணப் பெறுமதியில் 93 சதவீதம் ஆகும்.

(ஈ) மீளாய்வு ஆண்டின் இறுதியில் அதிகார சபையினால் சமுதாய அடிப்படையிலான சங்கங்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 11,105,000 ஆன தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.4. சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள், முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்கியொழுகாமைகள் அவதானிப்புச் செய்யப்பட்டன.

| | | |
|---|---|---|
| (அ) | 2008 இன் 36 ஆம் இலக்க நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை சட்டம் | நகரக் குடியிருப்பு அபிவிருத்தி தொடர்பான தேசியக் கொள்கையொன்றை தயார் செய்வதற்கு மற்றும் மேற்படி கொள்கை அமுல்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக அதிகார சபை தாபிப்பட்டிருந்த போதிலும், அதிகார சபை தாபிக்கப்பட்டு 7 வருடங்கள் ஆகியுள்ள நிலையில் மேற்படி தேசியக் கொள்கையைத் தயார் செய்வற்கு மற்றும் அமுல்படுத்துவதற்கு அதிகாரச சபை தயவறியிருந்தது. |
| | 10 ஆம் பிரிவு | அதிகார சபையினால் தவிசாளர் ஒருவர் உள்ளடங்களாக அங்கத்தவர்கள் 14 பேருக்கு மேற்படாத ஆலோசனைக் குழு நியமனம் செய்யப்பட வேண்டும் எனினும் அவ்வாறு ஆலோசனைக் குழு நியமனம் செய்யப்படாமை காரணமாக அதிகார சபையின் பிரேரணைகள், திட்டங்கள், கருத்திட்டங்கள் மற்றும் செயற்றிட்டங்கள் போன்றன அதிகார சபையின் நோக்கங்களுக்குரிய பணிகளை அங்கீகரிக்கும் |

| | | |
|---|---|---|
| | | போது அதற்கு ஆலோசனை வழங்கும் முறையியலொன்று தயார் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்<br>(i) நிதிப் பிரமாணம் 371 | முற்பணம் வழங்கப்பட்ட பின்னர் ரேம்படி பணி பூர்த்தி யடைந்தவுடன் பற்றுச்சீட்டுக்களை சமர்ப்பித்து முற்பணங்களைத் தீர்க்க வேண்டுமாயினும், 84 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட கூட்டுத்தொகையான ரூபா 1,098,362 ஆன முற்பணத் தொகையை தீர்ப்பதற்கு 01 மாதம் முதல் 05 மாதங்களுக்கு இடையிலான காலம் எடுத்திருந்தது. |
| | (ii) நிதிப் பிரமாணம் 756 | அதிகார சபையினால் வள நிலையங்களுக்கு விநியோகிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 1,390,086 பெறுமதிமிகக் தளபாடங்கள், பிளாஸ்ரிக் கதிரைகள், தையல் இயந்திரங்கள் மற்றும் கணனிகள் ஆண்டின் இறுதியில் இருப்புக் கணிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1982 இன் 45 ஆம் இலக்க இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மை (திருத்த)ச் சட்டத்தின் 20 (ஏ) உட்பிரிவு | அங்குலான வீடமைப்புக் கருத்திட்டத்தின் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கு முகாமைத்துவக் குழுக்களைத் தாபிக்க வேண்டுமாயினும் குறித்த முகாமைத்துவக் குழுக்களைத் தாபிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளாது, அதற்காக வீட்டு உரிமையாளர்களிடமிருந்து அறவிட்டுக் கொண்ட ரூபா 11,105,000 அதிகார சபையின் சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு முகாமைத்துவக் குழுக்களைத் தாபிக்க செயற்படாமை காரணமாக வீடமைப்புக் |

| | | |
|---|---|---|
| | | கருத்திட்டத்தின் பராமரிப்புச் செவினத்திற்காக மீளாய்வு ஆண்டில் அதிகார சபை தாங்கிக்கொள்ள வேண்டி ஏற்பட்ட செலவினம் ரூபா 1,972,786 ஆகும். |
| (ஈ) | 2007 பெப்ருவரி 22 ஆம் திகதிய அவி07.'.0140.'.226.'.103 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் | அதிகார சபை தாபிக்கப்பட்டவுடன் ரீயல் எக்ஸ்டேட் எக்ஸ்சேன்ஜ் தனியார் கம்பனியை முடிவுறுத்தி மேற்படி கம்பனியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அதிகார சபைக்குப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமாயினும், மீளாய்வு ஆண்டின் இறுதிவரை அக்கம்பனியை முடிவுறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | அரச வழங்கல் வழிகாட்டல் தொகுப்பு<br>(i) பிரிவு 3.4.3 | வழங்கலுக்கான வழங்குநர்கள் பதிவு செய்யப்பட்டுள்ள பட்சத்தில் அவர்களிடம் விலைகளைக் கோர வேண்டுமாயினும், அதிகார சபையினால் மீளாய்வு ஆண்டில் ரூபா 4,851,464 ஆன தளபாடங்களைக் கொள்ளும் போது பதிவு செய்யப்பட்ட ஒரு வழங்குனரிடமிருந்தும், பதிவு செய்யப்படாத 07 நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்பட்டிருந்தன. |
| | (ii) பிரிவு 5.1.1 | விலை மனுக்களைக் கோரும் போது விடயங்களின் வகைப்படுத்தல்களை தெளிவாகக் குறிப்பிட வேண்டுமாயினும், அவ்வாறு செயற்பட்டிருக்காமை காரணமாக விலைமனுக்களை ஒப்பிடுவது கடினமாக இருந்தது<br>உதாரணமாக மேசைகளின் பலகை வகை, கணினி மேசையின் அளவு |
| | (iii) பிரிவு 5.4.5 | இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது நிறுவனத்தின் பெயரில் நாணயக் கடிதங்களை வெளியிடுவதற்காக |

| | | |
|---|---|---|
| | | மாத்திரம் 30 சதவீதமான முற்பணத்தை வழங்குனருக்கு செலுத்த முடியுமாயினும் அதிகார சபையினால் தளபாடங்கள் கிடைக்க முன்னர் 50 சதவீதமான முற்பணமாக ரூபா 2,420,636 செலுத்தப்பட்டிருந்ததுடன், அவ்வாறான முற்பணம் செலுத்தப்பட வேண்டுமென்று ஒப்பந்தங்களிலும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |

## 2.5 போதியளவிலான அதிகாரங்களின் மூலம் உறுதிசெய்யப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

மீளாய்வு ஆண்டில் அதிகார சபை ஊழியர்களுக்கு ரூ.மி. 23.6 ஆன வீடமைப்புக் கடன் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் திறைசேரியின் அங்கீகாரம் இன்றி விசிறி கடன் கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் இதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

## 3. நிதி மீளாய்வு

## 3.1. நிதிப் பெறுபேறு

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களுக்கு அமைய 2015 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டில் அதிகார சபையின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 207,344,767 ஆன மிகையாக காணப்பட்டதுடன் இதற்கு மாற்றமாக முன்னைய ஆண்டின் குறை ரூபா 10,284,599 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வு ஆண்டின் நிதிப் பெறுபேறு ரூபா 217,629,366 ஆன வளர்ச்சி வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆதன அபிவிருத்தியாளர்களிடமிருந்து சேவைக் கட்டணமாக முன்னைய ஆண்டுகளில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் சேகரிக்கப்பட்டு அதிகார சபைக்குச் செலுத்த வேண்டியிருந்த ரூபா 207,331,767 ஆன சேவைக் கட்டணம் வருமானமாக மீளாய்வு

ஆண்டில் கணக்குளில் பதிவு செய்யப்பட்டுள்ளமை நிதிப் பெறுபேறின் வளர்ச்சியில் பிரதானமானமாகத் தாக்கம் செலுத்தியுள்ளது.

மீளாய்வு ஆண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளின் நிதிப் பெறுபேறுகளை ஆராயும் போது 2011 ஆம் ஆண்டில் ரூபா 57,276,732 ஆன நிதிசார் குறை காணப்பட்ட போதிலும், 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 11,619,000 ஆன மற்றும் ரூபா 6,032,874 ஆன நிதிசார் மிகை ஏற்பட்டிருந்தது. மீண்டும் 2014 ஆம் ஆண்டில் ரூபா 10,284,599 ஆன நிதிசார் குறை ஏற்பட்டிருந்ததுடன், மீளாய்வு ஆண்டில் இது ரூபா 207,344,767 ஆன மிகையாக மாறியுள்ளது. எவ்வாறாயினும் ஊழியர் பயன்கள் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான தேய்மானத்தைக் கவனத்தில் கொள்ளும் போது நிறுவனத்தின் பங்களிப்பு 2011 ஆம் ஆண்டில் ரூபா 31,567,761 ஆன எதிர்மறை பெறுமதியைக் கொண்டிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டு முதல் இது நேர்பெறுமதியைக் கொண்டதாக தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து மீளாய்வு ஆண்டில் இது ரூபா 263,421,617 ஆக இருந்தது.

## 3.2 விரிவான நிதிசார் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

(அ) கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வு ஆண்டில் சேவைக் கட்டண வருமானம் 100 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதுடன், இது மொத்த வருமானத்தில் 62 சதவீதமாக உள்ளது.

(ஆ) கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடைமுறை விகிதம் மற்றும் தேறிய இலாப விகிதம் முறையே 87 சதவீதம் மற்றும் 875 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதுடன், ஆதன அபிவிருத்தியாளர்களிடமிருந்து சேவைக் கட்டணமாக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் சேகரிப்பட்டு அதிகார சபைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 207,331,767 மீளாய்வு ஆண்டில் வருமானமாகக் கொள்ளப்பட்டமை இதற்குப் பிரதான காரணமாகும்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1. செயலாற்றுகை

நிலைபேறான நகரக் குடியிருப்பு அபிவிருத்தி ஏற்படுவதை உறுதி செய்வதற்காக தற்போது காணப்படுகின்ற வீட்டு அலகுகளை மேம்படுத்துவதன் மூலம் அல்லது மிகவும் வசதியான வீட்டு வசதிகள் மற்றும் குறைந்த நகர வசதிகளுக்கான பிரவேசத்தைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் சேவை வசதிகள் குறைவான நகரக் குடியிருப்புக்களில் வாழும் ஆட்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது 2008 இன் 36 ஆம் இலக்க நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் நோக்கமாகும்.

மேற்படி நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

(அ) மீளாய்வு ஆண்டில் 4122 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கான 07 கருத்திட்டங்கள் உள்ளடங்களாக 10 கருத்திட்டங்களுக்கு ரூ.மி. 993 ஐ செலவிடத் திட்டமிட்டிருந்த போதிலும் அதன் ஒட்டுமொத்த நிதிசார் செயலாற்றுகை ரூ.மி. 449 அதாவது 45 சதவீதமாகும்.

(ஆ) மீளாய்வு ஆண்டில் அமுல்படுத்த திட்டமிடப்பட்டிருந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூ.மி. 190.52 ஆன 03 நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) திருகோணமலையில் குடும்பங்களை குடியமர்த்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 96 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்காக மீளாய்வு ஆண்டில் ரூ.மி. 150 ஆன வேலைப் பகுதிகளை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதன் நிதிசார் முன்னேற்றம் ரூ.மி. 25 அதாவது 16 சதவீதமாக குறைந்த பெறுமானத்தைக் கொண்டிருந்தது.

(ஈ) மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 50,000 குடும்ப அலகுகளுக்கு சேவைகளை வழங்குவதற்காக ரூ.மி. 23 ஐ செலவிடத் திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 4190 குடும்பங்களுக்கு மாத்திரம் சேவைகளை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட தொகையில் 99 சதவீதம் அதாவது ரூ.மி. 22.76 ஆன தொகை செலவிடப்பட்டிருந்தை கணக்காய்வின் போது சிக்கலாக இருந்தது.

(உ) கூட்டுத்திட்டத்தில் உள்ளடங்காத சமூகத் திரட்டல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறுகின்ற

தொழில்முயற்சியாளர்களான பெண்களுக்கு தையல் இயந்திரங்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக மீளாய்வு ஆண்டில் ரூ.மி. 12 செலவிடப்பட்டிருந்தது.

## 4.2. முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

(அ) சிங்ஹபுர வீடமைப்புத் திட்டத்தின் 15 வீடுகள் 05 வருடகாத்திற்கு ஒரு மாதத்திற்கு ரூபா 5,000 வீதம் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன், ஒப்பந்தத்தின் அடிப்படையில் தொடர்ச்சியாக 03 மாதங்களுக்கு குத்தகை வாடகை செலுத்தப்படவில்லை எனின், ஒப்பந்தத்தை நிறைவு செய்தல் வேண்டும். எனினும் 05 மாதம் முதல் 34 மாதங்கள் வரையான காலப்பகுதிக்கு குத்தகை வாடகை செலுத்தாதிருந்த 08 வீடுகளின் குத்தகை ஒப்பந்தங்கள் ரத்துச் செய்யப்பட்டிருக்கவில்.

(ஆ) 2014 யூன் மாதம் 27 ஆம் திகதி நடைபெற்ற 06.∴2014 ஆம் இலக்க பணிப்பாளர் சபைத் தீர்மானத்திற்கு அமைய 26 சுயசக்தி நிலையங்களைத் தாபிக்க தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருந்த 12 நிலையங்களைத் தாபிக்காது அதற்குப் பதிலாக வேறு 11 நிலையங்கள் தாபிக்கப்பட்டிருந்தன.

## 4.3. செயற்பாட்டு வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

(அ) திறிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கடன்பெறுவோர் 435 பேருக்காக ரூபா 76,165,000 விடுவிக்கப்பட்டிருந்தது. கடன் வழங்குவது தொடர்பான கடன் பேரேடு இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதுடன் பணம் கிடைப்பதற்கான பற்றுச்சிட்டுக்களின் பிரதி, பிணையாளர்களின் அடையாள அட்டை விபரங்கள் கடன் கோப்புக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கிராம அலுவலரின் உறுதிப்படுத்தல் இன்றி கடன் வழங்கும் வாய்ப்புக்கள் மற்றும் சத்தியக்கடதாசிகள் பூர்த்தி செய்யப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) பெறுமதி முறையே ரூபா 58,594,359 மற்றும் ரூபா 34,500,00 ஆன துறுஇத்துருகம மற்றும் 48 ஆம் தோட்ட வீடமைப்புக் கருத்திட்டங்களின் சட்டபூர்வமான உரித்தை மீளாய்வு ஆண்டின் இறுதிவரை அதிகார சபைக்கு பொறுப்பேற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகார சபையினால் 10 சதவீதமான தரகுப் பணமாக 2015 ஆம் ஆண்டில் ரூபா 823,534 ஆன தொகை கடன் சேகரிப்பாளர்களுக்கு செலுத்தப்பட்டுள்ள போதிலும், அங்குலான வீடமைப்புக் கடன் மற்றும் திறிய வீடமைப்புக் கடன் முதல் கட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் கடனை அறவிட்டுக் கொள்ளும் முன்னேற்றம் முறையே 6 சதவீதம் மற்றும் 48 சதவீதமான பெறுமானத்தைக் கொண்டிருந்தது.

## 4.4. கருத்துமுரண்பாடுகளுக்குக் காரணமான கொடுக்கல் வாங்கல்கள்

விசிறி வீடமைப்புக் கடன் பெற்றுக் கொடுப்பதற்காக 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை அமைச்சிடமிருந்து ரூ.மி. 90 கிடைத்திருந்ததுடன், இதன் முதற் கட்டத்தின் போது ரூ.மி. 46.23 உம், இரண்டாம் கட்டத்தின் போது ரூ.மி. 34.60 உமாக விசிறி கடனாக வழங்கப்பட்டிருந்ததுடன், எஞ்சிய ரூ.மி. 9.17 ஆன தொகை வேறு பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டிருந்து.

## 4..5 புலப்படுகின்ற முறைகேடுகள்

மீளாய்வு ஆண்டின் இறுதியில் நகர் பிரதேசங்களில் வாழும் குறைந்த வருமானம் பெறுவோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக திறைசேரியினால் 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை பல்வேறு கருத்திட்டங்களுக்காக ரூ.மி. 508 அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அதிகார சபையினால் திறைசேரியின் அங்கீகாரம் இன்றி பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கு அமைய பல்வேறு கருத்திட்டங்கள் ஊடாக குறைந்த வருமானம் பெறுவோருக்கு வழங்கப்பட்டிருந்த நிதிசார் மற்றும் பொருட்களின் உதவிகளின் பெறுமதியை பயனாளிகளிடமிருந்து அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வு ஆண்டின் இறுதியில் அவ்வாறு குறைந்த வருமனம் பெறுவோரிடமிருந்து அறவிடப்பட்டுள்ள தவணைப் பணம் மற்றும் கடன் வட்டியின் பெறுமதி ரூபா 23,287,518 ஆகும்.

## 4.6. நிதியின் குறைப் பயன்பாடு

2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை திறைசேரியிடமிருந்து கருத்திட்டங்களுக்கு ரூ.மி. 1407 கிடைத்திருந்ததுடன், மேற்படி கருத்திட்டங்களுக்காக ரூ.மி. 1341 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. இதற்கமைய கருத்திட்டங்களுக்குக் கிடைத்த நிதிகளிலிருந்து ரூ.மி. 66 மேற்படி கருத்திட்டங்களுக்குச் செலவிடப்படாது அதிகார சபையில் தடுத்துவைக்கப்பட்டிருந்ததுடன், எஞ்சிய தொகை திறைசேரிக்கு மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதி வரையும் அனுப்பப்பட்டிருக்கவில்லை.

## 4.7. செயலிழந்த மற்றும் குறைப் பயன்பாட்டுச் சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டு மே மாதமளவில் சுயசக்தி நிலையங்கள் இரண்டுக்கு ரூபா 618,115 பெறுமதிமிக்க கணினி மற்றும் அதன் ஏனைய பாகங்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும் மீளாய்வு ஆண்டின் இறுதிவரை கணினி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படாமை காரணமாக மேற்படி கணினிகள் பயன்படுத்தப்படாது குறைப்பயன்பாட்டு நிலைமையில் காணப்பட்டன. மேலும் பொருட்களின் சேவைகளுக்கான உத்தரவாதக் காலமும் நிறைவடைந்திருந்தது.

(ஆ) மீளாய்வு ஆண்டில் அதிகார சபைக்கு உரித்தான ஜீப் வண்டியொன்றை புதுப்பிப்பதற்காக ரூபா 540,911 செலவிடப்பட்டுள்ள போதிலும் புதுப்பித்தலின் பின்னர் 06 மாதங்கள் பயன்படுத்தாத நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

(இ) சிலாபம் வீடமைப்புக் கருத்திட்டத்தின் செங்கல் உற்பத்திக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,150,000 பெறுமதிமிக்க 06 இயந்திரங்கள் கடந்த ஆண்டு முதல் மீளாய்வு ஆண்டின் டிசம்பர் மாத் 31 ஆம் திகதி வரையும் பயன்படுத்தப்படாது செயலிழந்து காணப்பட்டது.

(ஈ) சிங்கபுர வீடமைப்புக் கருத்திட்டத்தின் 70.'.37.'.4.'.1 ஆம் இலக்க வீடு 2012 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்படாது மூடிவைக்கப்பட்டுள்ளது.

## 4.8. சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

சீதாவக்கபுர வீடமைப்புக் கருத்திட்டத்தை ஆரம்பிக்கும் வைபவம் மற்றும் ஜனசெவண சுயசக்தி சமுதாய வளநிலையங்களைத் தாபிக்கும் அங்குரார்ப்பண நிகழ்வுக்காக பத்திரிகை அறிவித்தல்களை வெளியிடுவதற்கு மீளாய்வு ஆண்டில் ரூபா 1,231,552 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது.

## 4..9. வழங்கல் நடவடிக்கைகள் மற்றும் ஒப்பந்த நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

(அ) அங்குலான வீடமைப்புத் தொகுதியை நிர்மாணிக்கின்ற ஒப்பந்ததாரருக்கு 20 சதவீதமான வேலைகளை ஆரம்பிக்கும் முற்பணத்துக்கு மேலதிகமாக ஒப்பந்த உடன்படிக்கை ஏற்பாடுகளின் மூலம் இணங்காத ரூ.மி. 85 ஆன தொகை மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்யும் முற்பணமாக அதிகார சபையினால் செலுத்தப்பட்டுள்ளது.

(ஆ) குறித்த அமைச்சு மற்றும் திறைசேரியிடமிருந்து தேவையான ஏற்பாடுகளைப் பெற்றுக் கொள்ளாது திருகோணமலை பிரதேசம் மற்றும் சீதாவக்க பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள வீடமைப்புக் கருத்திட்டங்களுக்கு அதிகார சபையினால் முறையே ரூபா 747,754 மற்றும் ரூபா 2,395,289 ஆன செலவினம் தாங்கிக் கொள்ளப்பட்டுள்ள போதிலும் இந்த வீடமைப்புக் கருத்திட்டங்கள் இடையில் கைவிடப்பட்டுள்ளதென்பது கணக்காய்வின் போது தெரியவந்துள்ளது.

(இ) நகரக் குறைந்த வருமானம் பெறுகின்ற சமுதாயத்தினருக்கு 466 மலசலகூடங்களை நிர்மாணித்து முடிப்பதற்கு ரூபா 15,000 ஆன மூலப்பொருள் உதவியும், ரூபா 10,000 ஆன நிதி உதவியுமாக ரூபா 6.1 மில்லியன் ரூபா செலவிடப்பட்டிருந்தது. மலசல கூடங்களை நிர்மாணிப்பதற்காக ஹம்பாந்தோட்டை மாவட்டம் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும், மேற்படி மாவட்டம் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டிருந்த அடிப்படையானது கணக்காய்வின் போது தெரியவரவில்லை. அதிகார சபை மற்றும் பயனாளிகளுக்கு இடையே காணப்பட்ட உடன்படிக்கைக்கு அமைய ஒரு மாதத்திற்குள் மலசலகூடம் நிர்மாணித்து முடிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அவ்வாறல்லாத பட்சடத்தில் வழங்கப்பட்ட பணம் மற்றும் பொருட்களின் பெறுமதியை கடன்தொகையாகக் கருதி பயனாளி அதிகார சபைக்கு ஒரே தடவையில் செலுத்தல் வேண்டும்.

எனினும் மலசலகூடம் உண்மையாக பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாக அல்லது மலசலகூடம் நிர்மாணிக்கப்படவில்லை என்பதை இனங்காண்பதற்கான முறையியலொன்று அதிகார சபையிடம் இருக்கவில்லை. பயனாளிகள் 8 பேருக்கு நிதிசார் உதவி மாத்திரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கைக்கு அமைய மலசலகூடங்கள் நிர்மாணிக்கப்படாமை காரணமாக மேற்படி தொகையை அறவிட்டுக் கொள்ள அதிகார சபை நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

### 4.10. பிற அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகார சபையின் வளங்கள்

மீளாய்வு ஆண்டில் அதிகார சபை நேர்வரிசை அமைச்சுக்கு விடுவித்துள்ள அலுலவர்கள் இரண்டு பேருக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவாக ரூபா 306,830 ஆன தொகையை செலுத்தியிருந்தது.

### 4.11. பதவியணியினர் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

(ஆ) மீளாய்வு ஆண்டின் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் எண்ணிக்கை 111 ஆகும் என்பதுடன் உண்மையான பதவியணியினரின் எண்ணிக்கை 119 ஆகும் என்பதுடன், வெற்றிடங்களின் எண்ணிக்கை 15 ஆகும் என்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கும் மேலதிகமாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை 21 ஆகும்.

(ஆ) அதிகார சபையின் பொறியியலாளர் பதவிகள் 02 அங்கீகரிக்கப்பட்டுள்ள போதிலும் 2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வு ஆண்டின் இறுதிவரையும் மேற்படி பதவிகள் வெற்றிடமாகக் காணப்படுவதனால் நிர்மாணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அதிகார சபைக்கு மேற்படி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை உருவாகியுள்ளது.

(இ) அதிகார சபையின் பிரதான பதவியொன்றான பணிப்பாளர் (திட்டமிடல்) பதவி மீளாய்வு ஆண்டின் இறுதியில் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன், 2016 யூன் மாதம் வரை அப்பதவிக்கு அலுவலர் ஒருவரை ஆட்சேர்ப்புச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்கீட்டு நடவடிக்கைகளின் தன்மை மற்றும் நல்லாட்சி

### 5.1. கூட்டுத்திட்டம்

2003 யூன் மாதம் 02 ஆம் திகதிய பிஈடி.்.12 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 இற்கு அமைய நிறுவனத்தில் தற்போது காணப்படுகின்ற வளங்கள், கடந்த மூன்று வருடங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் பெறுபேறுகளின் முன்னேற்றம், கூட்டுத்திட்டத்தில் அவ்வவ் பணிகளுக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அலுவலர்களை இனங்காணல் போன்ற தகவல்களை உள்ளடக்கியதாக கூட்டுத்திட்டம் தயார்செய்யப்பட்டிருக்கவில்லை.

### 5.2. செயற்றிட்டம்

மீளாய்வு ஆண்டுக்கு ஏற்புடையதான செயற்றிட்டத்தில் உள்ளடங்கும் செயற்பாடுகளிலிருந்து நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய அளவுகள், அவ்வவ் பணிகளுக்கான பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் மற்றும் செயலாற்றுகையை மதிப்பீடு செய்வதற்கான சுட்டிகள் (ஐனெைஉயவழசள) சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3. உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

(அ) அதிகார சபையின் நிறுவன ஒழுங்கமைப்புக்கு அமைய உள்ளகக் கணக்காய்வாளர் பதவி நடுத்தர மட்டத்திலான பதவியாக உள்ளதன் காரணமாக கணக்காய்வின் செயலாற்றுகை மற்றும் சுயாதீனத்தன்மையில் நேரடியான தாக்கதை ஏற்படுத்தியுள்ளது.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் கணக்காய்வுப் பிரிவுக்கு உள்ளகக் கணக்காய்வாளர் பதவி மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், அப்பிரிவின் நடவடிக்கைகளுக்கு அதிகார சபையின் முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அலுவலர்கள் இரண்டு பேரின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள போதிலும் மீளாய்வு ஆண்டுக்காக அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடங்குகின்ற சமுதாய பங்கேட்பு நிர்மாணிப்புக்கள், நேரடியான நிர்மாணிப்புக்கள் தொடர்பான கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் போதியளவில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகார சபையின் செயலாற்றுகையை மதிப்பீடு செய்வது தொடர்பான நிகழச்சித்திட்டங்கள், கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்களில் உள்ளடங்கியிருக்கவில்லை.

## 5.4. வரவு செலவுத்திட்டக் கட்டுப்பாடு

2015 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட வருமானம் மற்றும் ஒரு சில செலவின விடயங்கள் வரவு செலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், வரவு செலவுத்திட்டத்தின்படியான செலவினங்களை உண்மையான செலவினங்களுடன் ஒப்பிடுயையில் 20 சதவீதம் முதல் 200 சதவீதம் வரையான வித்தியாசங்கள் அவதானிப்புச் செய்யப்பட்டதனால் வரவு செலவுத்திட்டமானது, பயன்வாய்ந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டு அம்சமொன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.5. வருடாந்த அறிக்கைகளை சபையில் சமர்ப்பித்தல்

2003 யூன் மாதம் 02 ஆம் திகதிய பிஈடி∴12 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 பந்திக்கு அமைய நிறுவனம், தமது வருடாந்த அறிக்கைகளை, கணக்கு ஆண்டு நிறைவடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் வேண்டுமாயினும் அதிகார சபையானது, 2013 ஆம் ஆண்டு முதல் ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமை மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பாக அதிகார சபையின் தவிசாளரது கவனத்துக்கு அடிக்கடி கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்குப் பதிவு | (ை) முன்னைய ஆண்டின் சீராக்கல்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.<br><br>(ை) சொத்துக்களின் செலவினம் சரியாக கணக்குகளில் பதிவு செய்யப்படாமை காரணமாக அவற்றின் பெறுமதி குறைவாகக் கணிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஆ) நிதி முகாமைத்துவம் | (ை) குறித்த பணி நிறைவடைந்தவுடன், முற்பணத்தைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br><br>(ை) பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களுக்குக் கிடைத்த அரச கொடைகள் மேற்படி நோக்கத்திற்கு புறம்பான நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அரச கொடைகளிலிருந்து செலவிடப்படாத நிலுவைகள் மீண்டும் திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (இ) பதவியணி நிருவாகம் | அதிகார சபையின் பிரதான பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கும் மேலாக ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் ஒருசில பதவிகள் சரியான முறையில் தரப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) ஒப்பந்த நிருவாகம் | மீளாய்வு ஆண்டில் அமுல்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்த ஒரு சில கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்களில் கீழ் மட்ட செயலாற்றுகை அவதானிக்கப்பட்டது. மேலும் அரச வழங்கல் வழிகாட்டல் தொகுப்புக்கு முரணாக ஒரு சில வழங்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |

| | |
|---|---|
| (உ) கடன் கட்டுப்பாடு | கடன் உடன்படிக்கைக்கு அமைய கடன் தவணைப் பணத்தை அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன், கடன் அறவிட்டுக் கொள்ளும் முன்னேற்றம் கீழ் மட்டத்தில் காணப்பட்டது. |

ஒப்பம் ∴ டபிள்யு.பி.சி. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)